ISSN 1391-9504

# விஜய்

Wijey - විජෙයි

2004 ஜுலை 19 - மலர் 01, இதழ் 09





விலை ரூபா: 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் ஆலோசனைகள்

# உப்பு! தப்பல்ல



"அக்கா அம்மா இல்லாமல் என்னவோ போல் இல்லையா? கமலா மாமி வீட்டுக் கல்யாணம் ஜோராய் நடந்திருக்கும். எனக்கும் கல்யாணம் பார்க்கிறதென்றால் கொள்ளை ஆசை. அம்மா தான் எங்களைக் கூட்டி போகலியே. எனக்கு அம்மா மேல கோபம் வருது" சிணுங்கினான் சின்ன ரமேஷ். அக்கா வசந்தி தன் தம்பியை ஆதரவோடு அணைத்து "அம்மாவைக் கோபிக்காத. எப்போதும் அம்மா தன் பிள்ளைகளுக்கு நல்லதைத்தான் செய்வா. இன்று என்ன கிழமை?" அக்கா கேட்டதும் ரமேஸ் பட்டென்று "புதன் கிழமை" என்று பதில் சொன்னான்.

"நாங்கள் இருவரும் எங்கே போய் வந்தோம்." "என்ன கேள்வியக்கா பள்ளிக்குத்தானே போனோம்." "அப்படிச் சொல்லடா என் ராசா. கல்யாணத்துக்குப் போயிருந்தா ஸ்கூல் போக முடிஞ்சிருக்குமா? எது முக்கியம்? கல்யாணமா? கல்வியா?"

ரமேஸின் கண்கள் அங்குமிங்கும் அலை பாய்ந்தன. அவன் கொடுப்புக்குள் சிரிப்பு விளையாடியது. "கல்விதான் முக்கியம். ஆனா ஒரு நாள் போகாமல் விட்டால் என்ன?"

"ஒரு நாள் கூடப் படிப்பை விடக்கூடாது என்பதுதான் அம்மாவின் விருப்பம். கல்வி மிக முக்கியம். ரமேஸ் இதோ பார் இன்னும் கொஞ்ச நேரத்தில் அம்மா வருவா" என்று அக்கா சொல்லும் போதே வாசல் கதவு கிரீச்சிடும் சத்தம் கேட்டது. பட்டுச் சேலை சரசரக்கப் பொட்டும் பூவுமாய் அம்மா உள்ளே வந்தாள். சந்தோஷத்தில் வசந்தியும் ரமேஸூம் முகம் மலர்ந்தார்கள். கல்யாண வீட்டில் மாமி கொடுத்த பலகாரங்களை ரமேஸ், வசந்தி இருவருக்கும் பகிர்ந்தளித்து விட்டு "வேலைக்காரன் சந்திரன் எங்கே?" என்றாள் அம்மா.

"சந்திரன் அவன் பெரியம்மா வீட்டுக்குப் போயிருக்கான். அம்மா பகல் நாங்கள் சாப்பிடவேயில்லை." "ஏன்" அம்மா திடுக்கிட்டா. "சமையலுக்குத் தேவையான எல்லாம் கொடுத்துவிட்டுத்தானே போனேன்." "வசந்தி இப்படி வா. நீ சாப்பிட வில்லையா?" "கொஞ்சம் சாப்பிட்டேம்மா. சந்திரன் கறிக்கு உப்புப் போட மறந்திட்டான் போலிருக்கு. அவசர, அவசரமாக சமைச்சு வச்சிட்டுப் போய்விட்டான் ருசியே இல்லை." "ஏன் அவன்தான் உப்புப் போடலைனா? நீங்க உப்புப் போட்டுச் சாப்பிட வேண்டியதுதானே? உனக்குக்கூட அந்தப் புத்தி வரலியே வசந்தி" என்று கூறிய அம்மா அறைக்குள் சென்று உடை மாற்றிவிட்டுக் கூடத்தில் வந்து உட்கார்ந்தா.

வசந்தியும், ரமேஸூம் கல்யாண வீட்டுப் பலகாரங்களைச் சுவைத்து உண்டு கொண்டிருந்தனர். "என்ன ரொம்ப பசி போலிருக்கு?" என்று அன்புடன் கேட்டாள் அம்மா.

"ஆம் அம்மா இப்போ பசி தீர்ந்து விட்டது." "நான் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன் கவனமாகக் கேளுங்கள். "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். உப்புச் சாதாரணமாக சமையலுக்கு உதவும் அற்புதமான ஒரு பொருள். கடல் நீரும், சூரியவெப்பமும் உப்புப்பாளங்கள் உண்டாகக் காரணமாகும் என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா? இயற்றை நமக்கு இனாமாகத் தரும் அற்புதக் கொடை இது. மனிதன் இப்பாளங்களை உடைத்து உப்புக் கற்களாகவும் தூளாகவும் மாற்றுகின்றான். ஆரம்பத்தில் மிக மலிவான விலையில் கிடைக்கக் கூடிய பொருள் உப்பு ஒன்றேதான். ஆனால் இதன் மகிமை மிகப் பெரியது. இதனால் தான் உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்ற பழமொழி வந்தது. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற பழமொழியும் வந்தது.


உப்பு அற்பமானதுதான். ஆனாலும் அது இல்லாமல் சமையலில் சுவையில்லை. ரசிக்கவும் முடியாமல், ருசிக்கவும் முடியாமல் முகம் சுழிக்க நேரிடும். இன்று நீங்கள் சாப்பிடாமல் போனதுக்குக் காரணம் சந்திரன் இல்லை, உப்புதான்!" என்று சொன்னதும் வசந்தியும் ரமேஸூம் வாய்விட்டுச் சிரித்தார்கள். "இன்னும் இருக்கு உப்பு வெளிப்படையாகத் தன்னை என்றைக்கும் காட்டிக் கொள்ள விரும்புவதில்லை. அவ்வளவு அடக்கம் [illegible]றை முகமாக உணவுகளில் கலந்து ந[illegible]த்ச் சுவையூட்டுவதுதான் உப்பின் சுபாவம். அது நீரிலே பிறந்து நீரிலே அழிகிறது. வசந்தி, ரமேஸ் உப்பிலிருந்து நாம் முக்கிய பாடம் படிக்கலாம். என்ன தெரியுமா? உப்பு உணவிலே அளவோடு இருக்க வேண்டும். அது அளவு மீறினால் அதற்கு மதிப்பில்லை. இது நமக்கு நல்லதோர் பாடம் புகட்டுகிறது. எந்த விஷயத்திலும் நம் தலையீடு அளவோடு இருக்கவேண்டும். தெரியுமா?" அம்மா கூறிய கருத்துக்களை ரமேஸூம், வசந்தியும் ஆச்சரியத்துடன் செவிமடுத்தார்கள்.

"அம்மா உப்பின் மகிமை இப்போதான் எங்களுக்குத் தெரிகிறது. ஆனால் சந்திரனுக்குத் தெரிய வேணுமே" என்று வசந்தி சொன்னதும் அம்மா இருவரையும் அணைத்துச் சிரித்து விட்டுச் சமையலறையை நோக்கி நடந்தாள்.

ரூபராணி ஜோசப்

# சிற்பக் கலை

சிற்பம் என்பது மிகவும் பிரசித்தி பெற்ற கலையாகும். ஏதாவது சிற்பங்களைச் சுற்றி வரும்போது பல்வேறு உருவங்களை அதில் காணலாம். சிற்பங்கள் இரு வகைப்படும். ஒன்று செதுக்கல் வேலைச் சிற்பம், அடுத்தது வார்ப்புச் சிற்பம். மரங்களில், கற்களில் செய்யப்படும் சிற்பங்களைச் செதுக்கல் வேலைச் சிற்பம் என்பர். இரும்பு, களிமண் போன்ற பொருட்களால் அச்சுச் செய்து செய்யும் சிற்பத்தை வார்ப்புச் சிற்பம் என்பர். மற்றுமோர் வகைச் சிற்பங்கள் பிளாஸ்டிக் கண்ணாடி போன்ற பொருட்களில் செய்யப்படுகின்றன. இங்கே காணப்படுவது 100 வருடங்களுக்கு முன்னர் கிழக்கிந்தியத் தீவுகளில் கற்களினால் செய்யப்பட்ட செதுக்கல் சிற்பங்களில் சிலவாகும். இவ்வாறான சிற்பங்கள் உள்ள பிரதேசங்களில் கற்களின் உதவியோடு செதுக்கல் வேலைப்பாடு செய்த "மொஆய்" சிற்பம் 600 அளவில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல: 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

## மனிதனின் நாகரிக வளர்ச்சியும், சுற்றுப் புறச் சூழலின் நாசமும்!

பேரண்டமும், சூரிய மண்டலமும், அதில் நமது புவிக்கோளும் தோன்றிப் பில்லியன் ஆண்டுகளாகிவிட்டன. அதன்பின் பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்தான் புவியில் முதல் உயிரினம் தோன்றியது. தொடர்ந்து பல மில்லியன் ஆண்டுகளுக்குப் பின்புதான், 'மானுடன்' என்ற உயிரினம் பரிணாம வளர்ச்சி அடைந்தது. அண்டத்தினதும், சூரியமண்டலத்தினதும் வரலாற்றைப் புவியின் வரலாற்றுடன் ஒப்பிடும் போது மனிதனின் வரலாறு கடுகளவானதே ஆகும்.

இந்த நீண்ட புவிச்சரிதவியல் வரலாற்றில் மனிதன் தன் வரலாற்றை நன்கு அறிந்திருந்த காலப்பகுதி சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் மட்டுமே எனலாம். கிறிஸ்தவர்களின் இறை தூதரான யேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்ட நாளில் இருந்தே நாட்களையும், மாதங்களையும் விஞ்ஞானபூர்வமாக எண்ணிக் கணித்துப் பதியும் வழக்கம் ஆரம்பமாயிற்று. இவ்வழக்கம் கூட அண்மைக் காலத்துக் கண்டுபிடிப்பாகும்.

இதனை வைத்து நோக்கும்போது, மனித வரலாற்றில், அண்மையில் கடந்து போன 2003 ஆண்டுகளில் தான், அவனது அறிவு வளர்ச்சியும், அதனால் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களும் மிகத் தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்றுள்ளன. ஆரம்பகால மனிதன் முதலில் கற்களை ஆயுதங்களாகப் பயன்படுத்தினான். பின் தீயைக் கண்டுபிடித்து உணவைச் சமைத்து உண்ண ஆரம்பித்தான்.

பின் உலோகங்களை அறிந்து இரும்பை உருக்கி ஈட்டிகள் செய்தான். அதனைத் தொடர்ந்து நதிக்கரை நாகரிகங்களை உருவாக்கினான். ஆனால் பிற்காலத்தில் பெருகிவரும் சனப் பெருக்கத்திற்கேற்பவும், வர்த்தகத்துக்காகவும் பெருமளவில் பாரிய உற்பத்தி முயற்சிகளைச் செய்யவாரம்பித்தபோது அவன் நேரடியாக இயற்கையின் சுதந்திரமான சமநிலையில் தலையிடத் தொடங்கினான். இன்று இயற்கை மீதான இத்தகைய சூழல் தலையீடுகள் உலகின் பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

காடழித்தல், மண்அகழ்வு, காற்று மாசு, நீர் மாசு, ஓசோன் படையில் ஓட்டை, கடல் மாசடைதல், அமில மழை, அணுக்கதிர்வீச்சு, உயிரியல், ஆயுத பாவனை, புதுப்புது வைரசுகளின் உருவாக்கம், புவி வெப்பமடைதல், துருவப்பனிக்கட்டி உருகுதல், கடலின் நீர் மட்டம் உயர்வடைதல், நாடுகள் கடலுக்குள் விழுங்கப்படுதல் முதலான சூழல் சீர்கேடுகள் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இவ்வழிவுகளில் இருந்து மனித குலத்தைக் காப்பாற்ற 'இராட்சசன் ஒருவன் வந்து பிறப்பான்' என்ற எதிர்பார்ப்பில் நாம் அனைவரும் நாம் உண்டு, நமது வேலையுண்டு என்று இது தொடர்பில் நமது பாரிய பொறுப்பினைத் தட்டிக் கழிக்காமல் சூழல் மாசடைவதைத் தடுக்க நம்மால் முடிந்த அளவு பங்களிப்பினைச் செய்ய முன்வர வேண்டும். உதாரணமாக நமது பொருளாதாரத்தை விழுங்கும் வெளிநாட்டுச் செயற்கை மென்பானங்கள் போன்ற முற்றிலும் செயற் கைப் பானங்களைத் தவிர்த்தல், பிளாஸ்டிக் பாவனையைத் தவிர்த்தல் முதலானவையைக் குறிப்பிடலாம்.

- ஆசிரியர்

# தேசிய மட்டப் பாடசாலைகளைத் தரமுயர்த்தும் விசேடத் திட்டம்!

நாடளாவிய ரீதியிலுள்ள தேசிய மட்டப் பாடசாலைகளின் கல்வித் தராதரத்தை மேன் நிலைக்கு கொண்டு வருவதற்கான செயற் திட்டமொன்றைக் கல்வி அமைச்சு முன்னெடுக்கவுள்ளது. தற்போது இலங்கை பூராவுமுள்ள பாடசாலைகளுள் 324 பாடசாலைகள் தேசிய மட்டப் பாடசாலைகளாகக் கருதப்படுகின்ற போதிலும், பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுமதிக்கும் போது, பெற்றோரின் கவனம் சுமார் 50 பாடசாலைகளின் மீதே செலுத்தப்படுகின்றது. கொழும்பு, கண்டி, குருணாகல், காலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளே இவை. அநேகமான பாடசாலைகளில் போதிய தளபாட வசதிகள், மனிதவளங்கள், கட்டிட வசதிகள் கிடையாது. இதனாலேயே அநேகமான பாடசாலைகள் தரம் குன்றிக் காணப்படுகின்றன.

எனவே, இது தொடர்பில் கவனத்தைச் செலுத்தி இவற்றை நிவர்த்திக்கும் பொறுப்பினை உணர்த்தும் விதமாகச் சகல தேசிய மட்டப் பாடசாலைகளிலும் அதிபர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் விதமான வேலைத் திட்டமொன்றைக் கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு, பாடசாலை அதிபர்மாருக்குத் தலைமைத்துவம், முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகள் பலவற்றையும் கல்வி அமைச்சு நடத்துவதுடன், கல்வி அமைச்சின் தேசிய மட்டப் பாடசாலைக் கிளைகளின் ஊடாகச் சகல தேசிய மட்டப் பாடசாலைகளிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றை நேர்த்தியாக முன்னெடுப்பதற்கென விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## 31 வருடங்களாக வெட்டப்படாத தலைமயிர்! கழுவி 6 வருடங்களாகின்றதாம்!!



படத்தில் காணப்படுபவரின் பெயர் டிரான் வேஹ். வியட்நாம் நாட்டவரான இவர் தலையிலும், கைகளிலும் எதனைச் சுமந்து கொண்டிருக்கிறார் தெரியுமா? வேறொன்றுமல்ல.... அவரது தலைமுடியேதான் அது. சாதாரணமாக நினைக்காதீர்கள். 31 வருடங்களாக கண்ணும், கருத்துமாக இருந்து அவர் வளர்த்தெடுத்த முடியே இது. தற்போது இவரது இந்தத் தலைமுடி 20 அடி நீளத்திற்கு வளர்ந்துள்ளது.

67 வயதுடைய டிரான் சுகவீனப்பட்டிருந்த ஒரு சமயத்தில் மாத்திரமே தலைமுடியை வெட்டியிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடைசியாக அவர் 6 வருடங்களுக்கு முன்னர் தான் தனது தலைமயிரைக் கழுவியிருந்தாராம். விவசாயத்தைத் தொழிலாக கொண்டிருந்த டிரான் இந்தத் தலைமயிர் வளர்ப்பின் காரணமாகத் தனது தொழிலைக் கைவிட நேர்ந்துள்ளது!

## க.பொ.த (உ/த) மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பாடம்

க.பொ.த (உ/த) வகுப்பில் கல்வியைத் தொடரும் மாணவர்கள், இனிவரும் காலங்களில் தாம் உயர்தரக் கல்விக்குத் தெரிவு செய்யும் பாடங்களுடன், தகவல் தொழில் நுட்பத்தினைப் புதியதோர் பாடமாகச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பினையும் வழங்குவதற்குக் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது. விஞ்ஞானம், கலை, வர்த்தகம் என எந்தவொரு விரும்பிய பாடத்தையும் தெரிவு செய்து பயிலும் மாணவர்கள் அவற்றோடு தகவல் தொழில் நுட்பம் பற்றியும் பயில்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிட்டுகின்றது.

இதன்படி, இது தொடர்பான அறிவூட்டல்களை வழங்க வேண்டிய ஆசிரியர்களுக்கு, உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் தகவல் தொழில் நுட்ப நிறுவனம், தேசிய கல்வி நிறுவனம், கல்வி அமைச்சு, பல்கலைக் கழகங்கள் ஆகியன இதனையிட்டுத் தமது பங்களிப்பினையும் செலுத்துகின்றன. ஏற்கனவே உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் இத்திட்டத்திற்கெனப் பெருந்தொகையிலான கணனிகளைக் கொடுத்துதவியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே!

## மாணவர்களிடையே மோதலைத் தடுக்க ஒழுக்கநெறிப் போதனை

சர்ச்சைகள், மோதல்கள் ஆகியவற்றில் ஈடுபடாமல் நல்லொழுக்க சீலர்களாக மாணவர்களை வழிநடத்தும் நோக்கில் அவர்களுக்கான ஒழுக்க நெறிப் போதனைகளை வழங்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. மாணவர்கள் மத்தியில் மோதல்கள் ஏற்படுவது இன்று வழமையாகி விட்டது. காலப் போக்கில் இது பாரிய பிரச்சினைகளுக்கு வழி ஏற்படுத்தி விடுவதோடு, மாணவர்களின் எதிர் காலத்தையும் கேள்விக் குறியாக்கிவிடும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டே மேற்படி ஒழுக்கநெறிப் பாடப் போதனையை வழங்குவதற்குக் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளதாக அறியவந்துள்ளது.

குறிப்பாக, பல்கலைக்கழக மட்டங்களில் கூட இன்று மோதல்கள் இடம்பெற்று வருவதனால், மாணவர்களுக்குப் பாடசாலை மட்டத்திலிருந்தே இந்த ஒழுக்க நெறிப் போதனையை முன்னெடுப்பதன் மூலம் மோதல்களைத் தவிர்ப்பது, சிக்கல்களைத் தீர்ப்பது, புரிந்துணர்வோடு நடப்பது, விட்டுக் கொடுப்பது போன்ற நன்நடத்தைகளைப் போதிப்பதன் மூலம் நல்ல பிரதிபலன்களைக் காணமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் போதனைத் திட்டத்திற்குச் சமயப் பெரியார்கள், தொண்டர் படை அதிகாரிகள், சமூக நல அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் ஆகியோரின் உதவியும் பெறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச, தனியார் பாடசாலைகளில் மாணவர், ஆசிரியர் கணக்கெடுப்பு!

### கல்வி அமைச்சின் நடவடிக்கை

கல்வி அமைச்சு வருடாந்தம் மேற்கொள்கின்ற கணக்கெடுப்பின்படி இலங்கையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை, மற்றும் மாணவர்கள் ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பான கணக்கெடுப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, இலங்கையில் 9750 அரச பாடசாலைகள் இருப்பதாக அந்தக் கணக்கெடுப்பில் தெரியவருகின்றது. இவற்றுள் 606 பாடசாலைகளில் உயர்தரம் வரையிலான வகுப்புக்கள் உள்ளவை என்றும், 2580 பாடசாலைகள் 5 ஆம் ஆண்டு வரை வகுப்புக்களைக் கொண்டவை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மேலும் இந்த அரச பாடசாலைகளில் 39,41,685 மாணவர்கள் கல்வி கற்பதோடு, 185036 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதேவேளை, தனியார் பாடசாலைகளில் சுமார் 1,50,000 மாணவர்கள் கல்வி கற்பதாகவும், இந்தத் தனியார் பாடசாலைகளில் 9,900 ஆசிரியர்கள் பணியாற்றி வருவதாகவும் அக்கணக்கெடுப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

'விஜய்' அடுத்த இதழ் ஓகஸ்ட் 02 ஆம் திகதி வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே அகலம் கூடிய நீர்வீழ்ச்சி





உலகிலேயே அகலம் கூடிய நீர்வீழ்ச்சியாகக் கருதப்படுவது "நயாகரா" நீர்வீழ்ச்சியாகும். அமெரிக்காவையும், கனடாவையும் பிரிக்கின்ற எல்லைக் கோட்டில் இந்த நீர்வீழ்ச்சி காணப்படுவதால் இதன் ஒரு பகுதி அமெரிக்காவிற்கும், மறுபகுதி கனடாவிற்கும் உரித்துடையதாக உள்ளது.

மேற்படி 'நயாகரா' நீர்வீழ்ச்சியானது அத்திலாந்திக் கடலின் சென்லோரன்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள கடல் பரப்பில் கலக்கின்றது. இதில் அமெரிக்க எல்லைக்குள் உள்ள நயாகராவின் உயரம் 167 அடிகளாகும். அகலம் 1060 அடிகளாகும். அவ்வாறே, கனடா எல்லைக்குள் இதன் உயரம் 158 அடிகளாகும். இந்த 'நயாகரா' நீர்வீழ்ச்சியானது, இரு நாடுகளுக்கும் இடையே உள்ள 'கோட்' எனப்படும் தீவினூடாகவே பிரிபடுகின்றது.

குதிரை லாடத்தின் வடிவத்தை ஒத்துள்ள இந்நதியினைக் கனடா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுமே பேணிக்காக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றன. 1678 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரொபர்ட் கெவலியர் என்பவரே "நயாகரா" நீர்வீழ்ச்சியினைக் கண்டுபிடித்தார். இதனையடுத்து 1885 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நீர்வீழ்ச்சியானது உல்லாசப் பயணிகளின் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டது.

ஹெலிகொப்டரில் பயணம் செய்து இந்நீர் வீழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இதுமட்டுமன்றி உல்லாசப் பயணிகளைக் கவரும் விதமான இன்னும் ஏராளமான அம்சங்களும் இங்கு காணப்படுவதனால், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குப் பெருமளவிலான உல்லாசப் பயணிகளை ஈட்டித்தரும் ஒரு முக்கிய சாதனமாக இந்த 'நயாகரா' நீர்வீழ்ச்சி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




# உலகிலேயே உயரம் கூடிய நீர்வீழ்ச்சி

உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது தெரியுமா? வெனிசுவலா நாட்டில் உள்ள 'ஏன்ஜல்' நீர்விழ்ச்சியே உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சியாகும்!

நெடிதுயர்ந்த மலையிலிருந்து பாயும் இந்த நீர்வீழ்ச்சி "கரோனி" எனப் பெயரிடப்பட்டுள்ள நதியாக உருவெடுக்கின்றது. இந்த 'ஏன்ஜல்' நீர்வீழ்ச்சியானது 3212 அடி உயரம் கொண்டதாகும். அதனை மீற்றரில் குறிப்பிடுவதென்றால் 912 மீற்றர்களாகும். வெனிசுவலா நாட்டு மக்கள் மத்தியில் 'ஏன்ஜல்' எனும் பெயரில் இந்நீர்வீழ்ச்சி மிகுந்த பிரபல்யத்தைப் பெற்றுள்ளது.

1935 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த விமானியான ஜிம் ஏன்ஜல் என்பவரின் சிறியரக விமானம் வெனிசுவலா நாட்டின் மலைப்பகுதிகளின் மேலாகப் பறந்து கொண்டிருக்கையில், குறிப்பிட்ட ஒரு மலைப்பகுதியில் அவர் தனது விமானத்தை இறக்கினார். அப்போது அப்பகுதியில் அவர் கண்ட காட்சி அவரைத் திக்குமுக்காட வைத்தது. ஆம்... அங்கு காணப்பட்ட பாரிய மலையொன்றின் மீதிருந்து பால்சொரியுமாப் போல் நீர்வீழ்ச்சி மிகவேகமாக நிலம் நோக்கிச் சரிந்தோடுவதைக் கண்டார் அவர். இந்தக் காட்சியை அவர் இரசித்துக் கொண்டிருக்கும் நேரம் பார்த்து அவரது விமானத்தின் என்ஜின் செயற்பட மறுத்துவிட்டது. விமானம் செயலிழந்துவிட்டமையினால் செய்வதறியாதிருந்த ஏன்ஜல், தனது விமானத்தை அங்கேயே விட்டுவிட்டு, சுமார் 11 மைல் தூரத்தைக் கால்நடையாக நடந்து மனித சந்தடிமிக்க இடத்தை அடைய வேண்டியேற்பட்டது.

பின்னர் தனது அந்த அரிய கண்டுபிடிப்பான நீர்வீழ்ச்சியைப் பற்றி அனைவருக்கும் அறியச் செய்தார். இவ்வாறு ஜிம் ஏன்ஜலினால் இந்த நீர்வீழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டமைக்கு அடையாளமாகவே அதற்கு 'ஏன்ஜல்' எனப் பெயர் சூட்டப்பட்டது.

ஏன்ஜல் நீர்வீழ்ச்சியானது கல், மண் ஆகியவற்றைக் கொண்ட பாரிய மலைமுகடுகளைக் கடந்தே நீர்வீழ்ச்சியாக ஊற்றெடுக்கின்றது. இந்தக் கல், மண் கொண்ட மலைப் பகுதி 'டேபிள்' என அழைக்கப்படுகின்றது. மேசையின் வடிவில் காணப்படுவதாலேயே அதற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டது. இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தமைக்கு ஞாபகார்த்தமாக ஏன்ஜலின் அந்தச் சிறியரக விமானம் தற்போதும் அப்பகுதியில் ஒரு ஞாபகார்த்தச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாகனச் சேவை நிலையங்கள் உருவாகியமை!




"பென்ஸ் ண்ணா.... உலகிலேயே அதிக கார் உற்பத்தி செய்வது நமது நாடு தானே...." என கொரல்லா தம்பி கேட்டது.

"ஆம்... ஜப்பானில்தான்! ஆனால் 1904 ஆம் ஆண்டு வரை இந்தப் பெருமையை பிரான்ஸ் தான் கொண்டிருந்தது. 1904 ஆம் ஆண்டில் பிரான்ஸை முந்திக் கொண்ட அமெரிக்கா அவ்விடத்தைத் தனதாக்கிக் கொண்டது. 1980 ஆம் ஆண்டு ஜப்பான் இவ் இடத்தை அடையும் வரையில் அமெரிக்கா தான் கார் உற்பத்தியில் முன்னணியில் இருந்தது."

"அப்படியென்றால்.... நமக்கு அமெரிக்காவைப் பற்றியும் பேசுவதற்கு நிறைய உள்ளது தானே...?"

"ஆமாம்.... உண்மைதான்.... நாம் விட்ட இடத்திலிருந்து தொடருவோம். 1980 ஆம் ஆண்டு ஹென்றி லென்லேண்ட் கெட்லெக் மோட்டார் வாகன நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவும் சிறப்புத் தன்மை வாய்ந்த ஒரு நிறுவனமாகும். அதே வருடத்தில் ஹென்றி ∴போட் "மொடல் பி" என்ற புதிய ரகக் காரோன்றை அறிமுகம் செய்தது." என பென்ஸ் அண்ணா கூறிய போது,












முதலாவது சேவை நிலையம்



"அண்ணா.... அப்போது அன்றைய காலகட்டத் தில் வேறு என்னென்ன வளர்ச்சிகள் ஏற்பட்டன?" எனக் கொரல்லாத் தம்பி கேட்டது.


"அந்நாட்களில் கார்ல் கிரஹம் பிஷர் என்பவரும், ஜேம்ஸ் ஏ.எலிசன் என்பவரும் இணைந்து வாகனங்களுக்குரிய பிரதான ஒளிக்குமிழைத் (ஹெட்லைட்) தயாரித்தனர். அதுவரை பாவனையில் இருந்த ஒளிக்குமிழை விட இது மிகவும் தரமும், பயனும் மிக்கதாக இருந்தது."

"அண்ணா அந்நாட்களின் போது எத்தனை கார்கள் தயாரிக்கப்பட்டன?"

"அமெரிக்காவில் மட்டும் 25,000 வாகனங்கள் தயாரிக்கப்பட்டன. உலகளவில் பார்க்கையில் 75,000 ற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கார்கள் தயாரிக்கப்பட்டன். இதில் மின்சாரத்தில் ஓடிய கார்களும் அடங்கும். மின்சாரத்தில் ஓடும் கார்களின் உரிமையாளர்கள் பற்றரியைச் சார்ஜ் செய்து கொள்ளும் வசதியைக் கொண்ட 'கராஜ்கள்' உள்ள பாதையிலே தமது கார்களைச் செலுத்தினர்."

"இதுவும் ரொம்ப ஜோரான விஷயம் தான்....." என்றது கொரல்லாத் தம்பி.

"பெற்றோலில் ஓடிய வாகனங்களுக்கும் இந்தப் பிரச்சினை இருந்தது. இந்தப் பிரச்சினைக்கு சில்வானாஸ் எ.∴ப் பொவுஸர் என்பவரே உரிய தீர்வினைக் கண்டார். இவர் வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்புவதற்கு வசதியாகக் குழாயொன்றைத் தயாரித்தார். இதன்பின்னர், 1907 ஆம் ஆண்டு ஜோன் மெக்லீன் என்பவர் முதலாவது வாகனச் சேவை நிலையம் (Service Station) ஒன்றை உருவாக்கினார்." எனக் கூறியது பென்ஸ் அண்ணா.




"அப்படியென்றால் இங்கு என்ன செய்யப்பட்டது?" எனக் கேட்டது கொரல்லாத் தம்பி.

"இங்குதான் எரிபொருள் நிரப்புதல், உதிரிப் பாகங்களுக்கான எண்ணெய் பூசுதல் போன்ற காரியங்கள் நடந்தன. இதன்பின்னர் 'ஓரியண்டல் ஒயில்' எனப்படும் நிறுவனம் உலகில் முதலாவது தடவையாக நகரங்கள் பலவற்றில் இவ்வாறான 'சேர்விஸ் ஸ்டேஷன்'களை நிறுவியது.

"இந்தக் காலகட்டத்தில் மேலும் நவீன ரகக் கார்கள் தயாரிக்கப்பட வில்லையா அண்ணா?"

"ஏன் இல்லை... 1906 ஆம் ஆண்டு புதுமையான காரொன்று தயாரிக்கப்பட்டது. 'ஸ்டென்லி ஸ்டீமர்' என்றே இக்கார் அழைக்கப்பட்டது. இன்னும் சிலர் இதனை '∴பிளயிங் டி பொட்' எனவும் அழைத்தனர். மணித்தியாலத் திற்கு 127.6 மைல் வேகத்தை இக்கார் கொண்டிருந்தது. இதுவே அந் நாட்களில் உலகிலேயே அதிவேகமாகச் செல்லும் காராகவும் கணிக்கப்பட்டது."




"வேறு என்ன நடந்தது...?"

"இதே காலத்தில் ∴போர்ட் ஐயா அவர்கள் தயாரித்த 'மொடல் கே' என்ற வாகனமும் சிறப்பிடத்தை வகித்தது. 2000 இறாத்தல் எடையைக் கொண்டிருந்த இந்த வாகனம், மணிக்கு 60 மைல் வேகத்தைக் கொண்டி ருந்தது. இதனால்தான் ∴போர்ட் ஐயா அவர்கள் சொகுசு வாகனங்களைத் தயாரிக்கத் தொடங் கினார். இதுவே 'மொடல் டீ' என்ற வாகனத்தைத் தயாரிப்பதற்கு வழி சமைத்தது." எனக் கூறியது பென்ஸ் அண்ணா.

"அதுவும் அப்படியா..?" என்றது கொரல்லாத் தம்பி.




"அமெரிக்காவில் வாகன ஓட்டுனர்களுக்கான அனுமதிப் பத்திரம் பெறவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டிலாகும். கொராடோ என்ற பிராந்தியமே இதனை ஆரம்பித்தது. இந்த சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு 1 டொலர் அறவிடப்பட்டது. எனினும் ஏனைய பிராந்தியங்களில் இந்த வழிமுறை பின்பற்றப்படவில்லை. பொறியியலாளருக்கான அனுமதிப்பத்திரமே அப்பிராந்தியங்களில் தேவையாகக் கருதப்பட்டது" என பென்ஸ் அண்ணா கூறியபோது,,

"அண்ணா உங்களுக்கு இந்த விடயங்கள் எல்லாம் மறந்து விடாதா?" என ஆச்சரியத்துடன் கேட்டது கொரல்லாத் தம்பி.

"இதெல்லாம் ஞாபகத்தில் இல்லையென்றால் பயன் இல்லைதானே...! நாம் 1906 ஆம் ஆண்டு காலப்பகுதியைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருந்தோம். அந்தக் காலத்தில் 'கொயோடே' என்ற நிறுவனம் "V8" என்ற என்ஜினை மீளமைப்புச் செய்தது. இதனால் வாகனங்களின் வேகம் இன்னும் அதிகரித்தது. இதற்கிடையே 'வெல்தம்' என்ற நிறு வனம் 'ஓரியண்ட் பெக்போட்' என்ற வாகனத்தை அறிமுகம் செய்தது. இந்த வாகனமே தபால் போக்குவரத்துத் துறையிலும் மாற்றத்தை நிகழ்த் தியது.

"∴போர்ட் ஐயா அவர்கள் இந்தக் காலகட்டத்தில் தானே தனது புகழ் பெற்ற வாகனமொன்றையும் தயாரித்தார்?" என ஞாபகத்தை மீட்டுக் கேட்டது கொரல்லத் தம்பி.


"ஆம்... 1906 ஆம் ஆண்டில்தான் அந்தக் காரை அவர் தயாரித்தார். ஆனால் அதற்கு முன்னைய வருடத்தில் ∴போர்ட் ஐயா தயாரித்த வாகனத்தின் உரித்துடைய நிறுவனத்தின் அடிப்படையான பங்குகளை அவர் உரிமையாக்கிக் கொண்டார். அந்த வருடத்தின் இறுதியில் ∴போர்ட் நிறுவனத்தின் 55.2 விதமான பங்குகள் ∴போர்ட் ஐயாவுக்கு உரித்துடையதாக இருந்தது." எனக் கூறியது பென்ஸ் அண்ணா.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகள் பற்றிய உண்மைகள்





பறவைகள் மீது பிரியமில்லாதவர்கள் எவருமே இல்லை. சிறியோர் முதல் வளர்ந்தோர் வரை பறவைகள் என்றால் அலாதியான ஆவல். அந்தளவுக்கு மனிதர்களைக் கவரும் விஷேட தன்மை பறவைகளிடம் காணப்படுகின்றது. இவ்வாறு பறவைகள் மீது நாம் பிரியம் காட்டினாலும் அவை பற்றிய அனேகமான உண்மைகள் எமக்குத் தெரியாது. பறவைகள் பற்றி அன்றாட வாழ்வில் அறிய முடியாத சில தகவல்களைக் கீழே தருகின்றோம் :

## பறவைகளுக்குப் பரிணாம வளர்ச்சி மூலம் கிடைக்கப் பெற்ற பண்புகள்

பறவைகள் என்பது பரிணாம வளர்ச்சி மூலம் பறப்பதற்கு என்று விஷேட இலட்சணம் பெற்ற ஒருவகை உயிரினமாகும். பறப்பதற்கு ஏற்ற முறையில் உடல் அமைப்பு இலகுவாகவும், பாரம் குறைவாகவும் உள்ளது. இறகுகள் (சிறகு) பறவைகள் பறப்பதற்கு இலகுவானதாக அமைகின்றன. அத்தோடு இறக்கைகள் பறவைகளின் உடல் உஷ்ண நிலையைப் பாதுகாக்கவும் உதவுகின்றன.

பறவைகளுக்குப் பற்கள் இல்லை. அவை பறப்பதற்கு இலகுவாகப் பாரம் குறைவாக அமைவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். கூர்மையான பார்வையை வழங்கக் கூடிய கண்களும், அழுக்கத்தைச் சமாளிக்கக் கூடிய கால்களும் பறவைகளுக்குப் பரிணாம ரீதியாகக் கிடைத்துள்ள விஷேட இலட்சணங்கள் (அடையாளங்கள்) ஆகும்.

அவை உண்ணக் கூடிய உணவுகள் விரைவாகச் சமிபாடடைந்து, அவற்றின் உடலுக்குப் போதிய சக்தியை வழங்குவது, ஊனுண்ணிகளில் பறவைகளுக்கு மட்டும், கிடைத்திருக்கின்ற விஷேட சிறப்புத் தன்மையாகும்.

## பறவைகள் - ஊர்வனவற்றில் இருந்து பரிணாம வளர்ச்சி பெற்றவைகளா?

பறவைகள் எந்த உயிரினத்தில் இருந்து பரிணாம வளர்ச்சி பெற்றவை என்பதை இன்று வரையில் உறுதியாகக் கூறமுடியாதிருக்கின்றது. இருந்த போதும் மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் இருந்து பறவைகள் அப்போது வாழ்ந்த ஒருவகை ஊர்வனவில் இருந்து பரிணாம வளர்ச்சி பெற்றவை என்ற அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இவ்வாறான ஊர்வன வகை உலகில் 13 கோடி (13000000) வருடங்களுக்கு முன்னர் டிரியாசிக் (Triassic) என்ற யுகத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று பதிவுகள் கூறுகின்றன.

இவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்ற பறவைகள் ஆரம்பத்தில் சிறிய இறக்கைகளுடன் காணப்பட்ட போதும் அவற்றால் பறந்து செல்லும் அளவிற்குச் சக்தி பெற்று இருக்கவில்லை என்றே கருதப்படுகின்றது. அத்தோடு அவற்றுக்கு வால் இருப்பதால் அந்த வால் பாரம் கூடியதாகவும் இருந்து பிற்காலத்தில் அந்த வால் படிப்படியாக இல்லாமல் போய் இருக்கின்றது. இவ்வாறு வால் சிறிதாக, இறக்கைகள் முளைத்திருக்கின்றன.





எனினும் ஆரம்பத்தில் இவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்ற பறவைகளுக்குக் கூரான சிறிய பற்கள் இருந்திருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறு ஆரம்பப் பரிணாம வளர்ச்சி பெற்ற பறவைகளில் இருந்து 1 கோடி வருடங்களின் பின்னரும் (10 மில்லியன்) கூட வாழ்ந்த பறவைகளிடம் சிறிய பற்கள் இருந்தமை அறியப்பட்டுள்ளது. என்றாலும் பெரும்பாலான பறவைகள் பற்கள் இல்லாதவைகளாகும்.



இதன் பின்னணியில் தான் பறவைகளின் முட்டைகளுக்கும், குஞ்சுகள் வளர்வதற்கும் போதிய உஷ்ணம் தேவை என்பது அறியப்பட்டது. இதுவும் பரிணாம வளர்ச்சியால் ஏற்பட்ட ஒரு முக்கிய பண்பாகும்.

## பறவைகளின் இடப்பெயர்வு

பறவைகள் பற்றிக் கவனம் செலுத்தும் போது அவற்றின் இடப்பெயர்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த இடப்பெயர்வு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கி.மு 1000 ஆம் வருடம் அளவில் உரோமர் கால குறிப்புகளிலும், பரிசுத்த வேதாகமத்திலும் (பைபிள்) கூட இந்த இடப்பெயர்வு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிரேக்க தத்துவஞானி அரிஸ்டோட்டில் கூட இவ்வாறான பறவைகளின் இடப்பெயர்வு பற்றி ஆராய்ந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. ஆயினும் அதன் பின்னர் ஆயிரக்கணக்கான வருடங்களின் பின்னர் இன்றும் கூட இது பற்றிய முழுமையான தகவல்களைப் பெறமுடியவில்லை.

**திசை அறி கருவி இல்லாமலே ஒரு திசையில் இருந்து இன்னொரு திசையில் உள்ள இருப்பிடத்திற்குச் செல்லும் ஆற்றல் கொண்டவை பறவைகள்!**

பறவைகளின் இடப்பெயர்வு எனும்போது, குளிர்ச்சியான காலநிலையின் போது தென் திசைக்கும், வசந்த காலத்தில் வடக்குத் திசை நோக்கியும், தாழ் நிலப்பகுதிகளில் இருந்து உயர் நிலத்திற்கும் அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டின் உட்பகுதியில் இருந்து கரையோரப் பகுதியை நோக்கியும் நகர்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது. தற்போது இந்த இடப்பெயர்வு பற்றிய ஓரளவு உண்மையான தகவல்கள் கிடைத்துள்ளன.

### உதாரணம்:-

கடும் பனிப் பிரதேசங்களில் வாழும் பறவைகள் தமது இனத்தின் நீடித்த வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் அப்பிரதேசங்களில் இருந்து உஷ்ணம் நிலவும் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றன. இவ்வாறான பறவைகள் பெரும்பாலும் சிறு புழு பூச்சிகளை இரையாகக் கொண்டே சீவியம் நடத்துவதால் குளிர்ச்சியான காலநிலையில் அவ்வாறான உணவு வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதால் உணவுத் தேவைக்காக ஓரிடத்தில் இருந்து இன்னோர் பிரதேசத்திற்கு இடம்பெயர வேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறு தொடர்ந்து உணவுப் பற்றாக்குறையான பகுதிகளில் வாழ்ந்தால் அவை காலப் போக்கில் அழிந்து போகும் நிலை ஏற்படுகின்றது.

தொடர்ச்சியாக இந்த நிலை ஏற்பட்டால் அந்தப் பறவை இனமே அழியும் அபாயம் இருப்பதால் பொருத்தமான காலநிலை, சுவாத்திய நிலை உள்ள பிரதேசங்களை நோக்கி நகருகின்றன. ஆனாலும் கனரி (Cannery) என்ற இனப்பறவைகளுக்கு 45c° என்ற குறைவான உஷ்ண நிலையிலும் வாழும் ஆற்றல் இருந்த போதும் உணவு கிடைக்காவிட்டால் எவ்வாறு வாழ்வது என்ற நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறு பறவைகள் இடம்பெயர்வதற்குப் பல காரணிகள் வழிவகுக்கின்றன. குறிப்பாக அவை இடம்பெயரும் காலம் வந்து விட்டது என்பதை உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதன் மூலமே உணர்ந்து கொள்கின்றன. அதன் பின்னரே இடப்பெயர்வை ஆரம்பிக்கின்றன.


சில நாடுகளில் வசந்த காலத்தில் நீண்ட பகல் நிலவுகின்ற போது அவை இடம்பெயர வேண்டிய காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்து செயல்படுகின்றன. அத்தோடு அவற்றின் இனப்பெருக்கக் காலத்தில் முட்டை இட்டு அடை காப்பதற்கும் குஞ்சு பொரிப்பதற்கும் உஷ்ணமான காலநிலை தேவைப்படுவதால் வடக்குத் திசையில் உள்ள பறவைகள் தெற்கு நோக்கி நகரத் தொடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# எல்லைத்தடை ஏதுமின்றிக் கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் உல்லாசப் பிரயாணிகள்!

## இடம்பெயரும் பறவைகள் அவற்றின் திசையை அறிவது எப்படி?

இவ்வாறு இடம்பெயரும் பறவைகள் அவை வாழும் நாட்டிற்குள் மட்டுமல்லாது, தேசம் விட்டுத் தேசம் நோக்கியும், கண்டம் விட்டுக் கண்டம் நோக்கியும் இடம்பெயர்ந்து செல்கின்றன. இடம் பெயர்ந்த பறவைகள் அவற்றுக்குப் பொருத்தமான காலநிலை வந்தவுடன் அவை வாழ்ந்த நாட்டிற்கு அதுவும் எந்த இடத்தில் கூடுகட்டி வாழ்ந்தனவோ அதே கூட்டுக்கு மீண்டும் திரும்புவது ஆச்சரியமான விடயமாகும். அவ்வாறாயின் அப்பறவைகள் எவ்வாறு அவற்றின் முன்னைய இருப்பிடங்களை நோக்கிச் சரியான திசையில் திரும்புகின்றன என்பது முக்கியமான கேள்வியாகும்.

இங்கு ஸ்ரோக்ஸ் என்ற (Storks) இனப் பறவைகள் குறித்து ஆய்வொன்று நடத்தப்பட்டது. அவை இடம்பெயரும் காலம் நெருங்கியதும் வழமையாக வாழ்ந்து வந்த இருப்பிடத்தை வேறு ஒரு திசைக்கு மாற்றிவிட்டனர்: இதன்போது அவை இடம்பெயர்ந்து விட்டு மீண்டும் திரும்பும் போது முன்னர் இருந்த இடத்திற்கு வருகின்றனவா? என்பதைக் கண்டறிவதே நோக்கமாகியது.

அப்போது அப்பறவைகள் அவை இடம்பெயரும் போது முன்னர் வாழ்ந்த இடத்தை ஊடறுத்ததாக இடம் பெயர் பாதையை அமைத்துக் கொண்டதோடு குறித்த இடம்பெயர் காலத்தின் இறுதியில் சரியான வாசஸ்தலங்களுக்குத் திரும்பின. இதன்மூலம் இப்பறவைகளுக்கு அவை தங்கியிருந்த திசையைச் சரியாக உணர்ந்து கொள்ளும் ஒரு வகை மோப்ப உணரும் சக்தி இருப்பது நிரூபிக்கப்பட்டது. மற்றொரு சந்தர்ப்பத்தில் அவை வாழ்ந்த இடத்தில் இருந்து 400 மைல் தொலைவிற்கு விமானத்தில் எடுத்துச் சென்று விடப்பட்ட போதும் அவை கூடுகட்டி வாழ்ந்த அதே இடத்துக்கு மீண்டும் திரும்பி வந்தமை ஆச்சரியப்பட வைத்த நிகழ்வாகும்.

இருந்த போதும் சில சந்தர்ப்பங்களில் பறவைகள் இரவு நேரங்களில் இடம்பெயர்வை ஆரம்பிக்கின்றமைக்கான காரணமும் இன்னும் சில கடல் பகுதிகளுக்கு மேலாகப் பறந்து சென்று எவ்வாறு அவை நீண்ட நாட்களுக்குப் பின்னர் சரியான இடத்திற்கு என்ன அடையாளத்தை (Land Marks) வைத்து மீண்டும் திரும்பி வருகின்றன என்பதும் இன்னும் சரியாகக் கூற முடியாத புதிராக இருக்கின்றது. இவ்விடயத்தில் பறவைகளுக்கு வழிகாட்டும் காரணிகள் என்ன என்பது இதுவரையில் விஞ்ஞான ரீதியாகக் கூட நிரூபிக்கப்படாத இரகசியமாமாக உள்ளது. இவ்விடயம் தொடர்ந்து இயற்கையின் இரகசியமாகவே இருந்து வருகின்றது.

கொலம்பஸ் தனது கடல் மார்க்கப் பிரயாணத்தின் போதும் கரை காணாது கடலில் தடுமாறிய போதும் இவ்வாறு கூட்டமாகப் பறந்து செல்லும் பறவைக் கூட்டங்களைக் கண்டு அவற்றின் திசையில் சென்றால் கரை தென்படும் என்று கருதி பின் தொடர்ந்த போதே ஒருவாறு அமெரிக்காவின் புளோரிடாவை இல்லாவிட்டாலும் பஹாமாஸ் தீவுகளையாவது சென்றடைய முடிந்தது.

## பறவைகளால் எவ்வளவு தூரத்தைக் கடக்க முடியும்?

இடப்பெயர்வின் போது "அக்ரின்டேர்ன்ஸ்" என்ற குருவி இனம்தான் ஆகக் கூடுதலான தூரமான 22000 மைல்களைக் கடக்கின்றது என ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. இந்தத் தூரத்தைக் கடக்க ஒரு வாரத்திற்கு 1000 மைல் வேகம் என்ற அடிப்படையில் 20 வாரங்களில் சென்றடைகின்றன. அனேகமான தரைப்பிரதேசப் பறவைகள் (Land Birds) இடப்பெயர்ச்சியின் போது சிறிய அளவு தூரம் பறந்து சென்று சிறிது இளைப்பாறி விட்டு மீண்டும், மீண்டும் பறக்கின்றன.


இவ்வாறில்லாமல் தொடர்ச்சியாக நீண்ட தூரம் பறக்கக் கூடிய பறவைகளும் உள்ளன. இவ்வகைப் பறவைகளில் "அமெரிக்கன் கோல்டன் பேர்ட்" (American Golden Bird) என்ற பறவை முக்கிய இடம் பெறுகின்றது. இவை கனடாவின் நொவாஸ் கோஷியா (Nova Scotia) என்ற பகுதியில் இருந்து, தென் அமெரிக்காவை நோக்கி, 2400 மைல்களைக் கொண்ட கடல் மார்க்கத் தூரத்தை, தொடர்ந்து பறந்து செல்கின்றன.



**இலங்கையில் பறவைகளின் பரம்பல்**





**இலங்கையை நோக்கி இடம்பெயரும் பறவைகள் வருகின்ற பாதைகள்**





**இலங்கைக்குள் பறவைகள் நுழையும் வழி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவியற் கலசம்



அநு.வை. நாகராஜன்

அன்புச் செல்வங்களே,
எம்மைச் சூழவுள்ள
இயற்கையில் கண்ணுக்குத்
தெரியாமலும் தெரிந்தும் எண்ணற்ற
அதிசயங்களும், விநோதங்களும்
நிகழ்கின்றன. அவற்றுள் ஒன்றே
வானில் உள்ள கருந் துவாரம்
அல்லது பள்ளம் (Black Hole)
அது பற்றிய விபரத்தை எமது
கலசத்தின் ஒரு பருக்கையாக எடுத்து
இங்கு பார்ப்போம்.
-அநு.வை.நா.

# வானிற் காணும் கருந் துவாரம்





### அறிவியற் கருத்தில் 'பிலெக்ஹோல்' என்றால் என்ன?

இது வானியற் பௌதீக இயலில் (Astra Physics) அறிவியலாளர் கண்டுபிடித்த ஓர் அருஞ் சிந்தனைக் கண்டு பிடிப்பாகும் இங்கே 'ஹோல்' (Hole) என்ற ஆங்கிலச் சொல்லைத் துவாரம், ஓட்டை, பள்ளம், வெறுமை ஒன்றுமில்லா வெற்றிடம் போன்ற பல கருத்துக்களைக் கொண்டு தமிழில் பொருள் கொள்ளலாம். இச்சொல்லுடன் கருமை அல்லது இருள் என்ற சொல்லும் இணைய, விண்ணில் தோன்றும் ஒரு பாரிய பாழ் இடத்தைக் குறிக்கின்றது. வானில் ஆங்காங்கே காணும் பாழ் இடத்தை ஐசக் நியூற்றன், ஐன்ஸ்ரீன் போன்ற அறிவியலாளர் கண்ட புவியீர்ப்பு விதி இதிற் சம்பந்தப்படுத் தப்படுகின்றது. அதாவது, பிரபஞ்சத்தில் எந்தப் பொருளும் ஒன்றை ஒன்று கவரும் தன்மை (ஈர்ப்பு) உடையதாம். இவ்வீர்ப்புச் சக்தி, பொருளின் நெருக்கத்தைப் பொறுத்திருக்கும். அதாவது, ஒரு பொருள் ஒன்றோடு ஒன்ற நெருங்கி உராயும்போது அல்லது இணையும் போது ஏற்படும் சக்தியே அதுவாகும்.

புவியில் உள்ள 'மொலிக்கியூல்ஸ்' (Molecules) எனப்படும் மூலக்கூறுகளில் அணுக்கூட்டங்கள் மிகவும் நெருங்கி வரும்போது ஈர்ப்பு ஏற்படும். இவ்வீர்ப்பு வலு 'எலெக்ரோன், ப்ரொட்டன்' என்பவற்றுடன் ஒன்றோடு ஒன்றாக நெருங்கி இணையும். அப்பொழுது, அவை உண்டு அல்லது இல்லை என்றாகிவிடும். அவ்வேளையில் பாரம் தாங்காது, அங்கே ஓர் உடு (நட்சத்திரம்) தோன்றி எரியத் தொடங்கும். ஓர் எல்லைக்கு மேல் ஒரு கிரகத்தின் எடை அடர்த்தி (Density) அதிகரித்து விட்டால், அது ஓர் உடு ஆகின்றது. இந்நிலையிலேயே சூரியன் எனும் பெருங்கோளும் (தாய்க் கிரகம்) இருக்கிறது. இதிலிருக்கும் ஐதரசன் எரிபொருளை எரித்துக் கொண்டு நாளடைவில் அதன் பொருள்கள் எல்லாம் அற்றுப் போக, சிவந்து தோற்றமளிக்கும். அதன் பின், சிறிது, சிறிதாக அது வெண்மையாகி ஈற்றில், ஒன்றுமே இல்லாது போய்விடும். இதற்கு நீண்ட காலம் எடுக்கும். இந்த இடத்தில், சூரியனும் பெரியதாக இருந்தால் என்னவாகும்? என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்கலாம்!

அதுவும், இவ்விதம் நேரும்போது அதிலுள்ள எலெக்ரோன், ப்ரொடோன்கள் எல்லாம் கலந்து சுழலும் நியூற்றோன் உடுவாக மாறினால் அங்கும் நிம்மதி இல்லாது நமது புவியில் ஈர்ப்பு போல் ஈர்ப்பு விசை அழுத்த அதனுள் இருக்கும் துகள்கள் வேகம் அதிகரித்து ஒளியின் வேகத்தை அணுகும் நிலை ஏற்படும். இது சிறு புள்ளியாகி அதன் காலம் குறுகி, ஈற்றில் அது அழிந்தே போய்விடும். கடைசியாக அது கரும் பள்ளம் எனும் பாழில் காணாமற் போய்விடும். இதுவே, விண்ணில் தோன்றும் கரும் துவாரம் அல்லது பள்ளம் ஆகும். இதுவும் இயற்கை விநோதங்களில் ஒன்றாம்.

# மிகப் பழைமையான கருந் துவாரம்





பேரண்டத்தில் காணப்படும் கருந்துவாரங்களிலேயே மிகப் பழைமையானது என்று நம்பப்படும் கருந்துவாரமொன்றை இப்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதன் திணிவானது சூரியனின் திணிவைவிட 10 பிலியன் அதிகமானது என விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளனர். கிடைக்கப் பெற்றுள்ள ஆதாரங்களின்படி இந்தக் கருந்துவாரத்தின் வயது 12.7 பிலியன் ஆண்டுகளாக இருக்கலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பேரண்டம் உருவாகி ஒரு பிலியன் ஆண்டுகளுக்குப் பின்னரே இக்கருந்துவாரம் உருவாகி இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இக்கருந்துவாரம் மிகமிகச் சக்தி வாய்ந்ததென்றும், எமது சூரிய மண்டலத்தைப் போல் சுமார் 1000 சூரிய மண்டலங்களை உறிஞ்சி இழுத்துக் கொண்டு விடத்தக்க இழுவைச்சக்தி வாய்ந்ததென்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர். இந்தக் கருந்துவாரத்தின் பரப்பையும், அதன் வயதையும் வைத்துப் பார்க்கும்போது அது அநேகமாகப் பேரண்டத்தில் காணப்படுகின்ற அனைத்துக் கருந்துவாரங்களிலும் பார்க்க மிகப் பழமையானதாக இருக்கவேண்டுமென்றும், இதுவே பேரண்டத்தில் உருவான முதலாவது கருந்துவாரமாகவும் இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய கருந்துவாரங்கள் தொடர்பில் மிக அபூர்வமாகவே தகவல்கள் கிடைக்கின்ற படியால் இக்கண்டுபிடிப்பு விஞ்ஞானிகளின் மத்தியில் பெரும் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திரத்தால் விளைந்த கொடுமை!









முன்பொரு சமயம் யாழ்ப்பாணம் நல்லூர்க் கிராமத்தில் ஒரு பெண் தன் குடும்பத்துடன் வசித்து வந்தாள். அவள் கீரிப்பிள்ளை ஒன்றைச் செல்லப் பிராணியாக வளர்த்து வந்தாள். அதனிடம் அன்பும், பாசமும் காட்டிப் பாராட்டி, சீராட்டி வளர்த்து வந்தாள். அந்தக் கீரிப்பிள்ளையும் அவளிடம் மிகக் கீழ்ப்படிவுடனும், விசுவாசத்துடனும் நடந்து கொண்டது. ஒரு நாள் அவள் தண்ணீர் மொண்டு வருவதற்காகக் கிணற்றுக்குப் போகவேண்டி இருந்தது. அவள் தன் குழந்தையை, தான் அன்பாக வளர்த்து வந்த கீரிப்பிள்ளையின் கவனிப்பில் விட்டுவிட்டு, தூரத்தே இருந்த கிணற்றுக்குக் குடத்துடன் சென்றாள்.

அவள் வீட்டை விட்டு வெளியேறிய சிறிது நேரத்தில் பெரிய நாகபாம்பு ஒன்று வீட்டுக்குள் பிரவேசித்தது. அது குழந்தையைத் தீண்டி விடக்கூடும் என்ற பயத்தாலும், தன் வளர்ப்புத் தாயின் மீது கொண்டிருந்த பாசத்தாலும் தூண்டப்பட்ட கீரிப்பிள்ளை, அந்த நாகபாம்பைத் தாக்கத் தொடங்கியது. பாம்புக்கும், கீரிப்பிள்ளைக்கும் நீண்ட நேரம் கடும் சண்டை நடந்தது. சண்டையின் இறுதியில் கீரிப்பிள்ளையே வென்றது. அது பாம்பின் உடலைப் பல துண்டுகளாகக் கடித்துக் குதறியது. கீரிப்பிள்ளையின் வாயிலும், வயிற்றிலும், முகத்திலும், உடம்பிலும் பாம்பின் இரத்தம் சிந்தி வழிந்தோடிக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தின் பின் தண்ணீர் மொண்டு வரச் சென்ற பெண் நீருடன் வீட்டுக்குத் திரும்பினாள். கீரிப்பிள்ளை சண்டை போட்ட களைப்புடன் வாசலருகே படுத்திருந்தது. தன் வளர்ப்புத் தாய் வந்துவிட்டதை அவதானித்த கீரிப்பிள்ளை தலையைத் தூக்கிப் பார்த்தது. தான் அவளது குழந்தையைப் பாம்பிடம் இருந்து காப்பாற்றியமைக்காக அவள் தன்னைப் பாராட்டுவாள் என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தது. அது துள்ளிக் குதித்து அவளை வலம் வந்தது. ஆனால், அந்தப் பெண்ணால் கீரிப்பிள்ளையின் செயலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதன் வாயிலும், முகத்திலும், உடம்பிலும் இரத்தம் தோய்ந்திருப்பதை அவள் கண்டாள். அது தனது அன்பான குழந்தையைக் கடித்துக் கொன்று விட்டதோ என்று கருதினாள்.

**வாயிலும், முகத்திலும், உடம்பிலும் இரத்தம் தோய்ந்திருப்பதை அவள் கண்டாள். அது தனது அன்பான குழந்தையைக் கடித்துக் கொன்று விட்டதோ என்று கருதினாள்**

அவள் பெருங் கோபமும் வேதனையும் அடைந்தாள். ஆத்திரத்தில் தான் என்ன செய்கிறேன் என்று அறியாமலேயே நீர்க் குடத்தைக் கீரிப்பிள்ளையின் மீது எறிந்தாள். கீரிப்பிள்ளை குடத்துக்குக் கீழே அகப்பட்டு இறந்து போய்விட்டது.

அவள் விரைந்து வீட்டுக்குள் சென்றாள். அங்கே அவளது குழந்தை சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தைக்குப் பக்கத்தில் ஒரு பெரிய நாகபாம்பு உடம்பு துண்டாடப்பட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தது. அவள் அதன் பின்னர் தான் உண்மையில் என்ன நடந்தது என்பதனைப் புரிந்து கொண்டாள். அவள் தன் ஆருயிர்க் கீரிப்பிள்ளையை ஆத்திரப்பட்டு அநியாயமாகக் கொன்று விட்டேனே என்று அழுது புலம்பினாள். பாம்பிடம் இருந்து தன் குழந்தையைக் காப்பாற்றியமைக்காக நன்றி கூறக் கூடத் தன்னால் முடியாமல் போய்விட்டதற்காக மனம் நொந்தாள். ஓடிச் சென்று கீரிப்பிள்ளையின் உடலை அணைத்துக் கொண்டு கண்ணீர் சொரிந்தாள். ஆத்திரத்தில் ஒரு காரியத்தைச் செய்வது மடைமையாகும். அது பின்னர் வேதனையையும், தீராத துக்கத்தையும் கொண்டு வரும்!

எஸ். தன்ரக்ஷன்

# எகிப்திய மம்மிகள்!

## அவற்றை எவ்வாறு செய்தார்கள்!




மம்மி என்று அழைக்கப்படுவது என்னவெனில் யாராவது ஒருவர் இறந்த பின்னர் அவரது உடலை "எம்பாம்" செய்வது அல்லது மருந்து போட்டுப் பதனிட்டு வைப்பதாகும். எகிப்தியர்கள் தான் மம்மியை ஆதிகாலத்தில் செய்தவர்கள். மரணத்தின் பின் மறுவாழ்வை எதிர் பார்த்ததினால், அவர்கள் உடலுக்கு மருந்து போட்டுப் பாதுகாத்தனர். இதற்கெனப் பலவிதமான பதனிடல் முறைகளைக் கையாண்டனர். புதைப்பதற்கு முன்னர் உடல் அழுகிப் போவதைத் தடுக்க 70 நாட்கள் முயற்சி செய்து அவற்றை மம்மியாக மாற்றினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவும் அதன் நாடுகளும்



# சுவிற்ஸர்லாந்து 1

| | | |
|---|---|---|
| **குறிப்பிடப்படும் நாட்டின் பெயர்** | : | சுவிற்ஸர்லாந்து |
| **கண்டம்** | : | ஐரோப்பா |
| **வலயம்** | : | மத்திய மேற்கு ஐரோப்பா |
| **எல்லைகள்** | : | மேற்கே பிரான்ஸ் நாட்டையும், வடக்கே ஜேர்மனியையும், கிழக்கே ஒஸ்ரியாவையும், தெற்கே இத்தாலியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. |




## தரைத் தோற்றம்

மேட்டு நிலத்தால் சூழப்பட்ட ஒரு சிறிய நாடு சுவிற்ஸர்லாந்தாகும். இந்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 41,285 சதுர கிலோமீற்றராகும். உலகில் மலைகள் நிரம்பப் பெற்ற நாடாக சுவிற்ஸர்லாந்தைக் குறிப்பிடலாம். நாட்டின் 70% வீதம் அல்ப்ஸ் மலைகளால் மூடப்பட்டுள்ளது. மத்திய மற்றும் தென் வலயமானது அல்ப்ஸ் மலைச் சாரலாலும், வட கிழக்குப் பிரதேசமானது அல்ப்ஸ் மலைப்பள்ளத்தாக்குகளாலும் சூழப்பெற்றுள்ளது.

இந் நாடு அல்ப்ஸ் மலைகளின் மலைத்தொடர்களைத் தொடர்ச்சியாகக் கொண்டுள்ளது. சுவிற்ஸர்லாந்தின் எல்லை இத்தாலி வரை செல்கிறது. சுவிற்ஸர்லாந்தின் மிக உயரமான மலைச்சிகரமாக டுபோர்ஸ்பயிட்ஸ் மலை காணப்படுகின்றது. ஆனாலும் நாட்டினுள்ளே காணப் படும் மிகப்பெரிய மலையாக இருப்பது டொமி மலை யாகும். பேர்னிஸ் அல்ப்ஸ் வலயத்திலுள்ள பிரசித்தி பெற்ற சிகரமாகும். ஈகர், மொன்வ் மற்றும் ஜன்க்கோர் மலைகள் நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற ஏனைய மலைச் சிகரங்களாக உள்ளன. இயற்கையான காடுகளை ஜூரா எனப்படும் பகுதிகளில் காணலாம். இக்காடுகளின் பல பகுதிகளில் விலங்கு வளர்ப்பு நடைபெறு கின்றமையால் காடுகள் அழியும் அபாயம் ஏற்பட் டுள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் பிரதான தரைத் தோற்றமான சுவிஸ் ஆற்றுப்பள்ளத்தாக்கு சுவிற்ஸர்லாந்தின் மத்திய பகுதி வரை பரவியுள்ளது. ஜெனீவா ஏரி, பொடென்சீ ஏரி என்பன இப்பகுதியில் காணக் கூடிய விசேட நிலத் தோற்ற அம்சங்களாகும். சுவிற்ஸர்லாந்து, மத்திய ஐரோப்பாவின் நீரூற்று என்று அழைக்கப்படுகின்றது. ரைன் நதி சுவிற்ஸாலாந்திலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. இது சுவிற்ஸர்லாந்தின் வட பகுதியை நோக்கிப் பாய்கின்றது. ஐரோப்பாவின் இன்னுமொரு பிரதான நதியான ரோன் நதியும் இந்நாட்டிலேயே ஆரம்பமாகின்றது. இவற்றை விட இன்னும் பல நதிகள் இங்கு உள்ளன.





சுவிற்ஸர்லாந்தில் உள்ள நதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அழகிய நீர் வீழ்ச்சிகள் பல இங்கு உள்ளன. உலகின் மிக உயரமான நீர் வீழ்ச்சியான பேர்ன் நீர்வீழ்ச்சி இவற்றில் பிரதான இடத்தைப் பெறுகின்றது. இந்நீர் வீழ்ச்சியானது 300 மீற்றர் உயரமானது. இந்நாடு நதிகள் பலவற்றைக் கொண்டிருந்த போதும் அவை பயனுடையதாக அமையவில்லை. ஆயினும் இடை, இடையே இருக்கும் ஏரிகளினூடாகப் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. ஜெனீவா போடென்சீ, லுகானோ, மெகோரியா போன்ற ஏரிகள் இவற்றில் பிரதான இடத்தைப் பெறுகின்றன.

## காலநிலை

சுவிற்ஸர்லாந்தில் உள்நாட்டு பிரதேசங்களுக்கிடையில் கால நிலையில் பெரும் வேறுபாடு காணப்படுகின்றது. பிரதேசங்களிலுள்ள உயரங்களினடிப்படையில் வெப்ப நிலையில் வேறுபாடு காணப்படுவதால் காலநிலையிலும் வேறுபாடு காணப்படுகின்றது. நாட்டின் மலைப்பிரதேசங்களில் கோடையில் வருடத்திற்கான சராசரி வெப்பநிலை செல்சியஸ் 10° பாகையாக உள்ளது. இது தாழ் நிலங்களில் செல்சியஸ் 27° பாகையாகக் காணப்படுகின்றது. உயரமான மலைப்பிரதேசங்களில் மனதிற்கினிய தோற்றமும், காலநிலையும் காணப்படுகின்றன. பள்ளத்தாக்கு மற்றும் மேட்டு நிலங்களில் சராசரியாக 910 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி வருடத்தில் கிடைக்கின்றது. உயர்நிலங்களில் அதிக பனி எந்நேரமும் காணப்படும். குளிர் காலங்களில் இந்நிலை அதிகமாகவே காணப்படும்.

பிரைஸ், பொன் என்ற இரு வகைக்காற்றுக்கள் இங்கு வீசுகின்றன. பிரைஸ் என்றழைக்கப்படும் காற்று உயர் பள்ளத்தாக்கு உள்ள பிரதேசங்களில் வீசுகின்றது. இக்காற்றுடன் உறைபனி அதிகமாக விழும் பொன் என்றழைக்கப்படும் காற்றானது அல்ப்ஸ் மலைப்பிரதேசத்தின் வடபகுதியில் வீசுகின்றது. இக்காற்றின் செல்வாக்கின் காரணமாக உறைபனி மற்றும் பனிக்கட்டிகள் மலைப்பிரதேசங்களிலிருந்து உடைந்து விழுகின்றன.

## இயற்கை வளங்கள்

நாட்டின் பிரதான இயற்கைவளமாக நீர் காணப்படுகின்றது. மலைப்பிரதேங்களில் அதிகமாகக் காணப்படும் பனிக்கட்டிகள் கரைந்து செல்வதன் மூலம் அதிக நீரைப் பெற்றுக்கொள்கின்றது. இதன் காரணமாக நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வது இலகுவாக உள்ளது. நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில் 60 வீதம் நீர் மின்சாரமாக உள்ளது. இதனை விடக் கிரனைட், சுண்ணக்கல் மற்றும் கட்டட நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தும் கல் வகைகளையும் இங்கு காணலாம்.

## தாவரம் மற்றும் விலங்குகள்





சுவிற்ஸர்லாந்தில் காணப்படும் வேறுபட்ட காலநிலை காரணமாக நாடு முழுவதிலும் பல் வேறுபட்ட தாவரங்களையும், விலங்குகளையும் காணக்கூடியதாக உள்ளது. குளிர் காலநிலை காணப்படும் பிரதேசங்களில் ஓக், பீச், மேபள் மற்றும் செஸ்நட் போன்ற மரங்களைக் காணலாம். இவற்றை விட என்றும் பசுமையாகக் காணப்படும் புருட் பீ மற்றும் பைன் வகைத் தாவரங்கள் இங்கு அதிகமாக உள்ளன. உயர வேறுபாடுகளுக்கேற்பத் தாவர வகைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அல்ப்ஸ் மலைப் பிரதேசத்தில் உயரம் குறைந்த தாவரங்களைக் காணலாம். 3000 மீற்றருக்கு மேற்பட்ட இடங்களில் பனிக்கட்டிகளைப் படை படையாகக் காணலாம்.

அல்ப்ஸ் மலைப்பிரதேசங்களை அண்டிய இடங்களில் சம்யோஸ், மார்மோட் மற்றும் அயிபெக்ஸ் போன்ற மிருகங்களைக் காணலாம். பொன்னிறமான இராஜாளிக் கழுகு, மற்றும் வல்லூறு என்பவற்றையும் காணலாம். காடுகளில் மான், ஓநாய் மற்றும் மரங்கொத்திப் பறவைகள், மைனா, "ஜே" என்றழைக்கப்படும் பறவை இனங்களையும் காணலாம்.

## சனத்தொகை

மனித வரலாற்றில் பல்வேறுபட்ட கால கட்டங்களில் பல வகைப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்துள்ளனர். ஆரம்பத்தில் எற்ருஸ் கான்ஸ், செல்டிஸ் மற்றும் உரோமர், ஜேர்மனியர் என்போர் சுவிற்சர்லாந்தில் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. இன்று அல்பைன், நோர்டிக் மற்றும் அதன் ஐரோப்பிய மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். பேசும் மொழியினடிப்படையில் பல இன மக்கள் பிரிந்து வாழ்கின்றனர். ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி மற்றும் உரோம மொழிகளைப் பேசும் மக்கள் இங்கு அதிகமாக வாழ்கின்றனர்.

| | | |
|---|---|---|
| மொத்தச் சனத்தொகை | : | 7,318,638 (2003இல்) |
| **வயதடிப்படையில்** | | |
| 0 இற்கும் 14 இற்கும் இடையில் | : | 16.6% |
| 15 இற்கும் 64 இற்கும் இடையில் | : | 67.8% |
| 64 இற்கு மேல் | : | 15.6% |
| சனத் தொகை வளர்ச்சி வேகம் | : | 0.21% |
| சனத் தொகை அடர்த்தி | : | சதுர கிலோமீற்றருக்கு 177 பேர் |
| நகரச் சனத்தொகை | : | 67% |
| எயிட்ஸ் நோயாளிகளின் தொகை | : | 19,000 (2001 இல்) |
| இன அடிப்படையில் | : | ஜேர்மனியர் 65% பிரான்சியர் 18% இத்தாலியர் 10% |

## மொழியும் சமயமும்

ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் உரோமன் ஆகிய நான்கு மொழிகள் இந்நாட்டின் அரசகரும மொழிகளாகும். இவற்றை விட ஸ்பானிய, போர்த்துக்கேய, துருக்கிய மொழிகளையும் இங்கு மக்கள் பேசுகின்றனர். சுவிற்சர்லாந்து மக்களில் அதிகமானோர் பல மொழிகளைப் பேசத்தெரிந்தவர்களாக உள்ளனர். சுவிஸ்டேஸ் என்றழைக்கப்படும் மொழியைப் பலர் பேசுகின்றனர். இவற்றை விடப் பல குலங்களைச் சேர்ந்த மக்கட் பிரிவினர் பேசும் மொழிகளும் இங்கு உண்டு. நாட்டின் பிரதான மதமாக உரோமன் கத்தோலிக்க சமயம் உள்ளது. மொத்தச் சனத்தொகையில் 44% வீதத்தினர் உரோமன் கத்தோலிக்க சமயத்தையும், 41 % வீதத்தினர் புரட்டஸ்தாந்து மதத்தையும் சேர்ந்தவர்கள். இஸ்லாமிய, கிறிஸ்தவ, யூத சமயத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு வாழ்கின்றனர் என்ற போதிலும் 7 % த்தினர் எந்தச் சமயத்தையும் சாராமல் வாழ்ந்து வருகின்றனர்.

## பிரதான நகரங்கள்

சுவிற்சர்லாந்தின் தலைநகர் பேர்ன் ஆகும். ஆனாலும் மிகப்பெரிய நகராகச் சூரிச் நகர் உள்ளது. நாட்டின் பிரதான மத்திய ஸ்தானமாக இது உள்ளது. பிரதான வர்த்தக நகராகப் பாசெல் அமைந்துள்ளது. துணி உற்பத்திக்கும் தைத்த ஆடைகள் உற்பத்தி தொடர்பாகவும் மிகப் பிரசித்தி பெற்ற நகராக பாசெல் உள்ளது. கலாசார மத்திய நிலையமாக ஜெனீவா நகர் அமைந்துள்ளது. சர்வதேச நிறுவனங்கள் பலவற்றின் மத்திய நிலையங்களை இந்நகர் கொண்டிருப்பதால் உலகப்பிரசித்தி பெற்றுள்ளது.

(மிகுதி அடுத்த இதழில்...)

எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பில்லாவிட்டால் நட்டம் நமக்குத்தான்!

மனிதர்கள் ஒருவருக்கொருவர் நட்பாய் இருந்து உதவி செய்து கொள்வது போன்று விலங்குகளும் நட்பைப் பேணுவதை நாம் அவதானிக்க முடிகிறது. மிருகங்கள் ஏனைய மிருகங்களோடு உறவு கொள்கின்றன. பறவைகளும் அதே இனத்தில் உள்ள பறவைகளுடன் நண்பர்களாக உள்ளன. அவ்வாறே சில பறவைகள் மிருகங்களுடனும், கடல் வாழ் உயிரினங்களுடனும் கூட நட்புப் பூணுவதை உலகில் நாம் காணலாம்.மறுபுறமாகத் தாவரங்கள் மிருகங்களுக்குத் தேவையான போஷாக்கையும், சக்தியையும் உற்பத்தி செய்கின்றன. இன்னொருவகையில் தாவரங்கள் வளர்வதற்குத் தேவையானபடி, மண்ணை வளமாக்கத் தேவைப்படும் உரம் மற்றும் கலவைகளை மிருகங்கள் கொண்டுள்ளன.


முதலையின் வாயில் எச்சங்களை உண்ணும் பறவைகள்


இவ்வாறான உயிரினங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதைக் காட்டப் பல உதாரணங்கள் உள்ளன.இதே போன்று ஒன்றுக்கொன்று ஒவ்வாமை (ஒத்து வராத) இல்லாத உயிரினங்கள், ஒன்றுபட்டு உணவைப் பங்கிட்டுக் கொண்டு அல்லது உணவை வழங்கி, ஒரே நிழலில் வாழும் நிலையும் இருக்கின்றது.இந்த உறவை விஞ்ஞானிகள் "ஸிம்பியோசிஸ்" என்று அழைக்கின்றனர். கிரேக்கச் சொல்லான "ஸுசம்பியோன்" என்பதில் இருந்து உருவான உற்ற நண்பர்கள் என்ற பதத்தில் இருந்தே இச்சொல் வந்திருப்பதாகும். இதற்குச் சிறந்த உதாரணம் மிகவும் சிறிய புழு இனம் ஒன்று "அல்கி" என்ற அங்கித் தாவர இனத்துடன் கொண்டுள்ள உறவைக் கூறமுடிகின்றது.

"கொன்குலாடு" என்ற இந்தப் புழு இனம், மணல் காணப்படும் ஆற்றங்கரைகளில் வாழ்கின்றன. "அல்கி"


கறையானின் வயிற்றுக்குள் அவற்றின் சமிபாட்டுச் சக்தியை இலகுவாக்கும் புரோட்டோ சோலா

என்ற தாவரமும் மிகவும் சர்வசாதாரணமாகக் காணப்படுபவைகளாகும்.இப்புழு இனம் இயல்பாக எந்த நிறத்தையும் கொண்டிருப்பதில்லை. ஆனாலும் மேற்படி தாவரத்தில் ஒட்டிக்கொண்ட அந்தத் தாவரத்தையே உண்டு வாழ்வதால் நாளடைவில் பச்சை நிறமாக உரு மாறுகின்றது. இப்புழுவின் விஷேட தன்மை, சிறிது காலத்தில், இந்தத் தாவரத்தை இரையாக கொள்வதை நிறுத்திவிட்டு, அல்கி என்ற தாவரத்தில் ஒட்டிக் கொண்டு அந்தத் தாவரத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்ற திரவத்தன்மையை உறிஞ்சி உணவாகக் கொண்டு உயிர்வாழ்கின்றது. அதே போன்று அந்தத் தாவரமும் அப்புழுவின் உடலில் இருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுப்பொருளை உணவாகப்பெற்று உயிர் வாழ்கின்றது. இவ்வாறு ஒன்றையொன்று பிரிக்கமுடியாதபடி இவை அவற்றுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து உறிஞ்சி உயிர் வாழ்கின்றன.

இவ்வாறே கறையானின் வாழ்விலும் அபூர்வமான தன்மையைக்காண முடியும்! மரத்தை உணவாகக் கொள்ளும், கறையானுக்கு அந்த உணவைச் சமிபாடடையச் செய்யக் கறையானின் வயிற்றுக்குள் வாழும் "புரோடாசோவா" என்ற ஒரு வகை உயிரினம் உதவியாய் இருக்கின்றது. கறையான் அரித்து உண்ணும் மரம் முதலில் இந்த புரொடாசோவா என்ற உயிரினத்திற்கே கிடைக்கின்றது. மரத்துகள்களில் உள்ள "செலியுலோஸ்" என்ற திரவம் இருப்பதால் மேற்படி நுண்ணுயிர் அந்தச் செலியுலோஸ் திரவத்தை இலகுபடுத்திக் கறையானுக்கு மரத்துகள்களை இலகுவாக்கி உணவைச் சமிபாடடையச் செய்கின்றது. கறையான் போன்ற சிறிய உயிரினத்தின் வயிற்றில் இன்னுமொரு உயிரினம் வாழ்வதென்றால் எவ்வளவு அபூர்வமாக இருக்கின்றது!


பைலட் மீன் திமிங்கிலத்திடம் இருந்து பாதுகாப்புப் பெறல்

## கடன் தீர்த்தல்

இதே போன்று தென்அமெரிக்காவில் வாழ்ந்து வருகின்ற ஒரு வகை எறும்பு இனம் மரத்தில் இன்னுமொரு வகைப் பேன் (சிற்றெறும்பு) வகையோடு ஒட்டி உறவு கொண்டிருப்பதைக் காணலாம். இந்த மரப்பேன் இந்த எறும்புகளின் வாழ்விடத்தில் முட்டைகளை இடுகின்றது. அந்த முட்டைகளை மேற்படி எறும்புகள் நல்ல முறையில் பக்குவமாகப் பாதுகாத்து வருகின்றன. பின்னர் அந்த முட்டைகளில் இருந்து வெளிவரும் மரப்பேன் ஒரு வகையான தேன் போன்ற சுவையுடைய திரவத்தை வெளிப்படுத்துகின்றது. அந்தத் திரவத்தை மேற்படி மரத்தில் உள்ள எறும்பு வகை ஆகாரமாகக் கொள்கின்றன. தமது முட்டைகளைப் பாதுகாக்கும் எறும்பு வகைக்குக் கடன் கழிப்பதற்காக மரப்பேன் இனம் இந்தத் திரவத்தை வெளிப்படுத்தி உதவுவதாகச் சுவையாகக் கூறப்படுகின்றது.

கடலில் "ஜல்லியர்" மற்றும் "மகரவ்" என்ற மீன் இனங்களிடையேயும் இதே போன்ற புதுமையான உறவு நிலவுகின்றது. அது குழந்தைப் பாதுகாப்பு என்று அழைக்கப்படுகிறது. சிறிய "மகரல்" என்ற மீன்குஞ்சுகள் "ஜல்லியர்" என்ற மீனின் அருகில் கொம்புகளுடன் ஒட்டிய நிலையில் நீந்துகின்றன. இதன் மூலம் சிறிய குஞ்சுகளுக்கு, ஏனைய மீனினங்களில் இருந்துவரும் ஆபத்துகளுக்குப் பாதுகாப்பு கிடைக்கின்றது. அத்தோடு ஜல்லியாவின் வாயின் இடுக்குகளில் இருந்து வெளியே விழும் உணவின் எச்சங்களையும் இந்த மீன்குஞ்சுகள் உண்டு வளர்கின்றன. இந்த உறவு ஒருதலைப் பட்சமான தொடர்பு என்றே அழைக்கப்படுகின்றது. இந்த மீனினத்தில் தங்கி வாழ்கின்ற சிறிய குஞ்சுகளால் பெரிய ஜல்லியாவுக்கு எந்த உதவிகளும் கிடைப்பாதாக இல்லை.

## மீனவ நண்பர்கள்

சுறா மற்றும் திமிங்கிலம் ஆகிய மீன்களோடு "பைலட் "என்ற மீனினமும் ஒரு தலைப்பட்சமான நட்பைப் பேணுகின்றது.இந்த இராட்சத மீன்களின் உடம்பை பைலட் என்ற மீனினம் பாதுகாப்புக் கவசம் போல் கருதி அந்த மீன்களுக்குக் கீழால் வலம் வருவதை வழக்கமாக கொண்டுள்ளது. இதன் மூலம் பைலட் மீன்வகை அவற்றை எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்கின்றது.

இதேபோன்று மேற்கிந்தியக் கடலில் "ரொமோரா" என்ற மீனினமும் சுறா மீன்களின் அருகில் இருந்து பாதுகாப்பைப் பெறுகின்றன. இந்த வகை மீன்கள் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்போது சுறா வரும் வரை காத்திருந்து ஒரு வகைத் தந்திரோபாய வழியில் அதன் மேனியில் தொற்றிக் கொண்டு வலம் வருவதோடு சுறாவின் உணவையும் பெறுகின்றது.

## பறவைக்கு முதலை நண்பன்

இதே போன்று "ஜிப்பான் பிளவர்" என்ற பறவைகள் முதலைகளுடன் உறவை வளர்த்துக்கொண்டுள்ளன.

வயிறு புடைக்க உண்ட முதலை ஆற்றங்கரையில் வாயைப் பிளந்து கொண்டு ஓய்வு எடுக்கின்ற போது இப்பறவைகள் முதலையின் வாய்க்குள் புகுந்து பற்களிடையே உள்ள உணவு எச்சங்களை உண்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளன. இதன் மூலம் முதலையாருக்கும், சுகமும், வாய், பல், ஆரோக்கியமும் கிடைப்பதால் இப்பறவைகளுக்கு இடைஞ்சல் உண்டுபண்ணாமல் முதலை அமைதியாக இருந்துவிடும்.

மாடு, மான், மரைகளோடு, மைனா, கொக்குப் போன்ற பறவைகளும் இவ்வாறான உறவை வைத்துக்கொண்டுள்ளன. இப்பறவைகள் மாடு,மரை,மான் ஒட்டகம் போன்ற மிருகங்களின் உடம்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒட்டுண்ணிகளை உணவாகக் கொள்கின்றன. இந்தச் செயல்பாடு காரணமாக இவ்வகை மிருகங்களுக்கு ஒட்டுண்ணிகளிடம் இருந்து பாதுகாப்பும் விடுதலையும் கிடைப்பதோடு இப்பறவைகளுக்கு ஆகாரமும் கிடைக்கின்றது. இவ்வாறு ஒன்றில் இருந்து ஒன்று நன்மை பெறும் நிலையை மிருகங்கள், தாவரங்கள், ஊர்வன, கடல் வாழ் உயிரினங்கள் என்பவற்றிடையே நாம் காண முடிகின்றது.



மானின் உடம்பில் ஒட்டுண்ணிகளை உண்ணும் பறவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் வன்கூடு


ஒருவராலும் திரும்பவும் உருவாக்க முடியாத அதிசயிக்கத்தக்க ஒரு பொருளே மனிதனின் உடல் என்று கூறலாம். இதில் சிறப்பான பகுதியாக மனிதனின் வன்கூட்டைக் குறிப்பிடலாம். மனித வன்கூட்டினூடாகவே மனிதனின் சகல அவயவங்களும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. வன்கூடு இல்லாவிடில் மனித சரீரத்தின் அவயவங்கள் ஒரே விதமாக முறைப்படி அமையாது. இதனாலேயே மனிதனின் வன்கூடு என்பது மிக முக்கியமான பகுதியாகக் குறிப்பிடப்படுகின்றது.

மனித எலும்புகள் மிகவும் பலமுள்ளவை. இவை விரைவில் முறிந்து விடாது. எலும்புகளே மனித உடலின் சட்டகமாய் அமைந்திருக்கின்றன. இந்த எலும்புகள் மிகவும் பாரம் கூடியதான நிலையில் திண்மப் பொருள்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் மேற்புறமுள்ள மண்டையோட்டுப் பகுதி மிகவும் சக்தியுள்ளதாகவும், மத்திய பகுதி சிறிது மென்மையாகவும் காணப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இணையும் இடம்
கையெலும்புகள்
விரலெலும்பு
தோற்பட்டை எலும்பு
மேற்புஜ எலும்பு
முழங்கால் எலும்பு
கை அனுமணிக்கட்டெலும்பு
தொடையெலும்பு
அரந்தி எலும்பு
ஆரையெலும்பு
கனுக்காலெலும்பு
கை விரல் எலும்பு
முட்டெலும்பு
கால் கணுக்கால் வெளிஎலும்பு
அனுக்கனுக் கால்எலும்பு
கால் விரலெலும்பு
முள்ளந்தண்டு வரிசை
பின் கனுக்கால் வெளிஎலும்பு
முன் கனுக்கால் எலும்பு
விஜய்
கனுக்கால் எலும்புகள்
அனுக்கனுக்கால் எலும்புகள்
கால் விரலெலும்புகள்



# நற்பண்பினை ஏற்படுத்தும் விளையாட்டு

தற்போதைய கல்வித் திட்டத்தில், விளையாட்டுக்கள் தனிச் சிறப்புடைய ஓர் அங்கமாக விளங்குகின்றன. ஓடி விளையாட நாட்டம் கொள்ளாத குழந்தைகளிடம் சில குறைபாடுகள் உள்ளன என்பது உளவியல் நூல் வல்லார் கண்ட முடிவாகும். கல்விச் சாலையிலே மாணவர்களுக்கு விளையாட்டு நேரமே மற்றெல்லா நேரங்களை விட மிக மகிழ்ச்சியையும், சுறுசுறுப்பையும் கொடுக்கும். எனவேதான் மன மகிழ்வோடு அது இலகுவாகச் செய்யப்படுகின்றது.

விளையாட்டு என்று கூறும்போது அதற்குரிய சிறப்பியல்புப் பண்புகளையும் அவதானித்தல் வேண்டும். மன மகிழ்ச்சியோடு இலகுவாகச் செய்யப்படுவது மாத்திரமன்றி, அது உடல் உறுப்புகளுக்கு உரமளிப்பதாகவும் அமைய வேண்டும் அத்தன்மை நிறைந்த விதிகளினாலே நெறிமுறையாக அமைக்கப்பட்டதுதான் விளையாட்டு. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும், தினமும் பற்பல போட்டிகளும், இன்னல்களும் எதிர்படுகின்றன. அவற்றையும் விளையாட்டுகள் போலக் கருதி வெல்வதற்கு முயற்சித்தல் வேண்டும் என்ற உணர்வை விளையாட்டுகள் கற்பிக்கின்றன. குழந்தைகள் விளையாடும் போது எதிர்பாராத விதமாகச் சண்டையிட்டுக் கொள்வதுண்டு ஆனால் ஒற்றுமைப்படுகின்றனர். இதுவே குழந்தைகளின் பண்பு. இக்குழந்தைகளின் மனநிலை எதிர்காலத்தை வளப்படுத்தக் கூடியது. விளையாட்டே இத்தகைய பண்பினைத் தருகின்றது.

விளையாட்டுச் சமுதாயத்திலே பிரிக்க முடியாத ஓர் அங்கமாக அமைந்திருக்கிறது. அது மனிதப் பண்புகளையும் சமுதாயப் பண்புகளையும் வளப்படுத்துவதோடு, உறுதி பெற்ற உடலையும், சிறந்த ஆரோக்கியத்தையும் தந்து ஒவ்வொருவரையும் முழு மனிதராக்குகிறது.

**எப். சுமையா, தரம் $10^A$**
**இ/அஸ்ஸலாம் மு.ம.வி, இறக்குவானை.**

# எனது பாடசாலை

எழில் மிகு நுவரெலியாவிற்கு 6 மைல்களுக்கப்பாலுள்ள கந்தப்பளை எனும் அழகிய கிராமத்தில் எனது பாடசாலை அமைந்திருக்கிறது. எனது பாடசாலையின் பெயர் நு/மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயம். இப்பாடசாலை 1926 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் தற்போதைய அதிபர் திருவாளர் கே.ஆர்.இராமையா. இப்பாடசாலையிலே 800 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். 1 தொடக்கம் 13 வரையிலான வகுப்புகளும் உள்ளன.

இப்பாடசாலையில் ரூபி, சபயா, எமரோல்ட் ஆகிய மூன்று இல்லங்கள் உள்ளன. நவராத்திரி விழா,தமிழ்த் தினப் போட்டி போன்ற நிகழ்வுகள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. கணனி அறை நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் போன்றனவும் இங்கு அமைந்துள்ளன. எனவே, நான் எப்பொழுதும் எனது பாடசாலைக்கு விசுவாசம் கொண்டவளாய் இருப்பேன். இந்தக் கல்லூரித் தாயை என்றும் மறவேன்.

**எஃப்.பாத்திமா பாரா, தரம் 5**
**நு/மெதடிஸ்ட் த.ம.வி, கந்தப்பளை.**






# பூனை

எனது செல்லப்பிராணி பூனை ஆகும்.
அதன் நிறம் வெள்ளை.
எனது பூனைக்கு உண்பதற்கு நான் மாமிசம் கொடுப்பதுண்டு.
எனது பூனை 'மியாவ், மியாவ்' என்று கத்தும்.
நான் எனது செல்லப் பூனையுடன் தினமும் விளையாடுவேன்.

**ஆய்ஷ அன்ஸார், தரம் $3^B$**
**அல்ஹம்றா ம.வி,**
**தர்கா நகர்.**



# நான்

எனது பெயர் அபிராமி. எனது வயது பன்னிரெண்டு. நான் சென்/பேர்ணடேத் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஏழாம் தரத்தில் கல்வி கற்கின்றேன். எனது அதிபரின் பெயர் ரவிமிராண்டா. எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி கோயிலசாந்தி. எனது தந்தையின் பெயர் பழனிவேல். எனது தாயின் பெயர் அமராவதி. எனக்கு மூன்று சகோதரர்கள் உள்ளனர். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகியன எனது விருப்பத்திற்குரிய பாடங்களாகும். எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். கதைப் புத்தகம் வாசித்தல். பத்திரிகை வாசித்தல் போன்றவை எனது பொழுது போக்காகும்.

**அபிராமி, தரம் 7**
**சென்/பேர்ணடேத் த.ம.வி, சிலாபம்.**

# எழுந்திரு தம்பி

துள்ளி எழுந்திரு தம்பி
தூக்கம் கலைத்திடு தம்பி
பள்ளிக்குச் சென்றிடு தம்பி
பண்பாய் இருந்திடு தம்பி!

கல்வியில் சிறந்திடத் தம்பி
களவை மறந்திடு தம்பி
நல்ல குணமதைப் பெற்றிட
நன் நண்பரைத் தேர்ந்தெடு தம்பி!

கடமைகள் புரிந்திடு தம்பி
பாரினில் வல்லவனாய் வந்திடு தம்பி
எல்லாவற்றையும் பெற்றுத் தர
இறைவனை வணங்கிடு தம்பி!

**சுரேந்திரன் சுதர்சனா, தரம் $8^A$**
**யா/இராமநாதன் கல்லூரி.**



# மழை

எறும்புகள் புற்றிலிருந்து வெளிவர!
செண்பகம் கூத்தாட!
வானம்பாடி வட்டமிட!
பிராணிகள் வீடு செல்கின்றன!
இவ் இன்பக் காட்சியை
இரசித்த வானவர்கள்
பூமியைப் போட்டோ எடுத்தனர்
மின்னலால்!

மேகங்களோ ஏனெனக் கேட்பாரற்ற
உழவர் நிலை கண்டு,
கண்ணீர் வடிக்கத் தொடங்கி விட்டன!
மேகங்களின் கண்ணீரே
மழையெனச் சொரிந்ததுவோ!...

**எம். ராசாட், தரம் 10,**
**அஸ்ஸிராஜ மு.ஆ.பாடசாலை,**
**தெல்லங்க, கெலிஓய.**

# ஒற்றுமை


பகைமையே வாழ்வின் கடைக்கண் - அதைப்
பிடுங்கியே எறிவாய் மனிதா
அன்பே ஒற்றுமையின் அடித்தளம் - அதை
மனிதனில் விதைப்பாய் மனிதா!

ஆணவம் என்பது பேய் -அதை
அடியோடு ஒழித்திடு மனிதா
அன்புடன் வாழ்வு மலர்ந்திட- நீ
அயராதுழைத்திடு மனிதா!

**பி.பவித்ரா, தரம் $7^A$**
**இ/எம்பி/பரி.யோவான் த.ம.வி,**
**இறக்குவானை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகளின் கைங்கரியம்



மர இலைகளை உருளையாக்கும் எறும்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்களா? காடுகளிலேயே இவ்வகை எறும்புகள் அதிகம் உள்ளன. இலைகளை உருளையாக்கும் எறும்புகள் 'Leaf Roller Ants' என்றே அழைக்கப்படுகின்றன. மரங்களிலிருந்து நிலத்தில் உதிர்ந்து கிடக்கின்ற இலைகளின் எந்தவொரு முனையும் தெரியாத அளவிற்கு அந்த இலைகளை இந்த எறும்புகள் உருளை வடிவில் சுருட்டுகின்றன. இவ்வாறு சுருட்டிய பின்னர் அந்த இலைகளிலேயே அவை தமது சீவியத்தை நடத்துகின்றன.

# என்னே வாய்....!




"பாம்பு" என்றாலே படையும் நடுங்கும் என்பார்கள். எந்தவொன்றையும் கவ்விக் கொள்ளவோ, அதனை உணவாக உட்கொள்வதற்கோ வசதியான வகையிலே அவற்றின் எலும்புகள் அமைந்துள்ளன. குறிப்பாகத் தலைப் பகுதியும், முகப் பகுதியும் அமைந்த பகுதியே இவற்றிற்கு வசதியாக அமைந்துள்ளது.

பாம்புகள் எல்லாமே விஷ முள்ளவை அல்ல, விஷமில்லாத பாம்புகள் தான் அதிகமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதே வேளை விஷமுள்ள நாக பாம்புகள் போன்ற பாம்புகள் ஏதேனும் ஒன்றைக் கவ்வுவதற்காக வாயைத் திறந்திருக்கும் போது அவற்றின் விஷம் அடங்கிய குழாய் இயல்பாகவே விரிவடைகின்றது. முட்டைகளை உணவாக உட்கொள்ளும் பாம்புகள் முட்டையை வாயினால் கவ்வ முயற்சிக்கும் போது இயல்பாகவே அவற்றின் வாய் அகலத் திறக்கப்படுவதால் இலகுவாக முட்டையை அவை கவ்விக் கொள்ள முடிகின்றது.

இதன்பின்னர், அவற்றின் உடம்பில் காணப்படுகின்ற சமிபாட்டுத் தொழிற்பாட்டின் மூலமாக அந்த முட்டை செரிக்கச் செய்யப்படுகின்றது.

# பலவடிவக் கொம்புகள்




மிருகங்களைப் பற்றிப் பேசும் போது கொம்புகளைப் பற்றியும் பேசுவதுண்டு. காளைமாடு, ஆடு, மான், செம்மறி, எருமை, ரைனோசரஸ் ஆகிய மிருகங்கள் இவற்றுள் குறிப்பிடக் கூடியன. ஆனால் கொம்புகளின் வடிவமானது மிருகங்களுக்கு மிருகம் மாறுபட்ட வடிவங்களில் காணப்படுவதுண்டு. அவை சில சமயங்களில் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கும், இரைகளைக் கிழித்து உண்பதற்கும் இந்தக் கொம்புகளைப் பயன்படுத்துகின்றன.




**மான் ஒன்றின் வித்தியாசமான வடிவிலான கொம்பினையும், அதன் வளர்ச்சிப் படிமுறையினையும் இங்கு காணலாம்.**



**பாரிய கொம்புகளையுடைய செம்மறி.**

# குரங்குகளின் கைரேகைகள்






குரங்கின் பரிணாம வளர்ச்சி பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்றன. இதனையொட்டியே குரங்கின் வடிவத்தை ஒத்த வேறுபட்ட பெயர்களைக் கொண்ட குரங்கு வகைகள் காணப்படுகின்றன. இதன்படி இந்தப் பல்வேறு வகையிலான குரங்குகளின் கைரேகைகள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலமாக அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட அந்தந்த இனக் குரங்குகளின் கைரேகை வடிவங்களையே இங்கு காண்கின்றீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகளைச் சுறுசுறுப்பாக்கிய முயலார்!



படிப்பினைக் கதை

எறும்புகள் மிகவும் சுறுசுறுப்பானவை என்று நாம் கூறுவதுண்டு. ஆனால் ஒரு காலத்தில் இவை சோம்பேறித்தனம் மிக்கவையாக இருந்ததாகவும் கதையொன்று உள்ளது. இவை பெரிய மிருகங்களின் உடலில் தொற்றிக் கொண்டு அவற்றின் இரத்தத்தை உறிஞ்சித்தான் வாழ்ந்ததாகவும் அக்கதையில் கூறப்படுகின்றது. இதனால் அவை உடம்பை வருத்தி உணவைத் தேடுவதில் அக்கறை செலுத்தவில்லை.

எனவே, இந்த நிலையானது ஒரு முயலுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. எந்த நாளும் இந்த எறும்புகள் தனது உடம்பில் ஏறி இருந்து இரத்தத்தை உறிஞ்சுகின்றனவே! என அது கவலையுடன் யோசித்தது. இதற்கு நல்லதோர் தீர்வைக் காண வேண்டுமென எண்ணிய அது மனதிற்குள் திட்டமொன்றைத் தீட்டியது.

இப்படி இருக்கையில் ஒரு நாள் இந்த முயல் ஓர் ஓரமாக அமர்ந்து, ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தது. சிறிது நேரத்தில் பொதியொன்றைத் தூக்கிக் கொண்டு வந்த அது, தனது உடம்பில் ஏறியிருந்த எறும்புகளைப் பார்த்து, "எறும்புகளே, எறும்புகளே நான் இன்று மிகவும் சுவையான உணவொன்றைக் கொண்டு வந்துள்ளேன். இதைச் 'சோறு' என்று அழைப்பார்கள். நான் இதனை உங்களுக்குத் தருவேன் ஆனால் ஒரு நிபந்தனை... நீங்கள் எல்லோரும் எனது உடம்பிலிருந்து கீழே இறங்க வேண்டும், இல்லையென்றால் இதனை உங்களுக்குத் தரமாட்டேன்..." என்றது.

பின்னர், அந்தச் சாப்பாட்டுப் பார்சலைப் பிரித்து விரித்து அதனை எறும்புகளுக்குக் காட்டியது. இப்போது எறும்புகளுக்கு வாய் ஊறியது. சோற்றைச் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. முயலின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட எறும்புகள் முயலின் உடம்பிலிருந்து மிக வேகமாகக் கீழிறங்கி, சாப்பாட்டுப் பார்சலை நோக்கிச் சென்றன.

இதனை அவதானித்த முயல் படு வேகமாக சாப்பாட்டுப் பார்சலைத் தனது கைக்குள் எடுத்துக் கொண்டு பின்னோக்கி நகர்ந்து சிறிது தூரம் சென்றதும் பார்சலில் இருந்த சோற்றிலிருந்து சிறிதளவை முயல் உட்கொண்டது. பின்னர் எறும்புகளை மீண்டும் அது அழைத்தது.

"ஏன் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்...? வாருங்கள், வாருங்கள்.." என்று முயல் அழைத்த மறுகணமே எறும்புகள் இன்னும் அந்தச் சாப்பாட்டுப் பார்சலை நோக்கி நகர்ந்து வந்தன. எறும்புகள் அருகே வரும் நேரம் பார்த்து முயல் மீண்டும் சாப்பாட்டுப் பார்சலை எடுத்துக் கொண்டு இன்னும் சற்றுத் தூரம் ஓடிச் சென்றது. இப்படி எறும்புகள் நெருங்கி வருவதும் முயல் சாப்பாட்டுப் பார்சலுடன் ஓடுவதும் பல தடவைகள் மாறி, மாறி நடந்ததால் எறும்புகள் ஏமாற்றத்திற்குள்ளாயின.

இப்போது எறும்புகளுக்குக் களைப்பாக இருந்தது. "ஏன் இந்த முயலார் நமக்கு இப்படிச் செய்கிறார்..?" என எறும்புகள் கவலையுடன் பேசிக் கொண்டன. ஆனால் முயலோ இந்த விளையாட்டை விட்டபாடில்லை.

மீண்டும், மீண்டும் இப்படியே அந்த முயல் சாப்பாட்டுப் பார்சலுடன் ஓடிச்செல்கையில் எதிர்பாராத விதமாக கல் ஒன்றில் கால் தடுக்கி கீழே விழுந்தது. இதனால் அதிர்ச்சிக்குள்ளாகிய முயல் பார்சலுடன், அங்கு காணப்பட்ட மரமொன்றின் மேல் ஏறிக் குந்திக் கொண்டது. அடுத்து, அவ்விடத்துக்கு ஓடிவந்த எறும்புகள்.. மரத்தின் கீழே கூட்டம் கூடி முயலார் இறங்கி வரும்வரை காத்திருந்தன. ஆனால் முயலாரோ மரத்திலிருந்து கீழே வந்த பாடில்லை.
எறும்புகளுக்கோ பசி வயிற்றைக் கிள்ளியது. குடிப்பதற்குத் தண்ணீரும் இருக்கவில்லை. கடைசியில் பொறுக்க முடியாத கட்டத்தில் அவை மரத்தின் மீது ஏறிச் சாப்பாட்டை எடுப்பதென முடிவெடுத்தன. எறும்புகள் மரத்தில் ஏறத்தொடங்கிய மறுகணமே முயல் மரத்திலிருந்து கீழே குதித்து மிக வேகமாக ஓடியது. ஒருவாறு எறும்புகளின் தொல்லையிலிருந்து மீண்டு விட்டதாக மகிழ்ச்சி கொண்ட முயல் அங்கு காணப்பட்ட புற்களை உண்ணத் தொடங்கியது.

மரத்தின் மேல் ஏறிய எறும்புகளுக்கு மேலும் பலத்த ஏமாற்றம் கிட்டியது. பசி மேலும், மேலும் வாட்டியது. இத்தனை காலமும் மற்ற மிருகங்களின் இரத்தத்தை உறிஞ்சி வயிற்றை நிரப்பி வந்த அவைக்கு இம்முறை முயலார் செய்த வேலையால் உண்பதற்கு எதுவுமின்றி வயிறு ஒட்டிப் போயிற்று. இதனால் தான் இன்று கூட நாம் காண்கின்ற எறும்புகளின் வயிற்றுப்பகுதி ஒட்டினாற் போல் காணப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் எறும்புகள் தமது வயிற்றுப் பசியினைப் போக்குவதற்காக அங்குமிங்குமாகக் கூட்டமாக நடந்து திரிந்தே தமக்குரிய உணவினைத் தேடிக் கொள்வது வழக்கமாகியது. அதிலிருந்தே அவை சுறுசுறுப்பாகவும் மாறின.

ஆக! நாமும் சிறு வயதிலிருந்தே சுறுசுறுப்பாக இருப்பதற்குப் பழகிக் கொள்ளல் வேண்டும். கஷ்டப்பட்டு உடலை வருத்தி வேலை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லையேல் சோம்பேறித்தனம் கொண்டிருந்தால் நமது முன்னேற்றத்திற்கு அது பெரும் தடையாக அமைந்து விடும் என்பதை இந்தக் கதை சித்தரிக்கின்றதல்லவா!

## விஜய் மாணவர் கழகம்



டி.அரபாத், ஆண்டு $8^{B}$, அல்ஹிதாயா ம.வி, கொழும்பு - 10.
**அங்கத்துவ இல-37**



சிறிதரன் ரகுராம், ஆண்டு 6, யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-38**



எஸ்.நிஷாந்தன், ஆண்டு $8^{A}$, யா/ஹாட்லி கல்லூரி, யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-39**



பாத்திமா சஸ்னா, ஆண்டு $10^{E}$, அல்-அக்ஷா தேபாடசாலை, கற்பிட்டி.
**அங்கத்துவ இல-40**



ம.ஆர்த்திகன், ஆண்டு 11, வவு/தமிழ் ம.ம.வி, வவுனியா.
**அங்கத்துவ இல-41**



முகம்மது சாதிக், ஆண்டு $7^{A}$, மட்/அந்நாஸர் வித்தி. காத்தான்குடி.
**அங்கத்துவ இல-42**



எம்.முபாரிஸ், ஆண்டு $8^{E}$, சாகிரா தேசிய கல்லூரி, புத்தளம்.
**அங்கத்துவ இல-43**



எம்.ராஜன், ஆண்டு $11^{A}$, அல்பஹ்ரியா ம.வி, கல்முனை.
**அங்கத்துவ இல-44**



எம்.சிராஃப், ஆண்டு 11, மா/தாருல் உலூம் ம.வி, மாத்தறை.
**அங்கத்துவ இல - 45**



ம.தர்ஷிகா, ஆண்டு $10^{C}$, யா/கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்.
**அங்கத்துவ இல-46**



பாத்திமா நிஸ்கா, ஆண்டு 3, அக்.ஆயிஷா பாலிகா ம.வி, அக்கரைப்பற்று.
**அங்கத்துவ இல-47**



பாத்திமா ஹம்னா, ஆண்டு 6, அல்-மதீனா வித்தியாலயம், நிந்தவூர்.
**அங்கத்துவ இல-48**

## இருதயத் துடிப்பு

நிமிடமொன்றுக்கு யானையின் இருதயம் 72 தடவைகள் துடிக்கின்றது. அவ்வாறே நாயின் இருதயத் துடிப்பு 110 தடவைகள், குதிரையின் இருதயத் துடிப்பு 44 தடவைகள், மீனின் இருதயத் துடிப்பு 16 தடவைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பற் சிகிச்சைக் கல்விக்கூடம்

உலகில் முதன்முதலாகப் பற்சிகிச்சைக் கல்விக்கூடம் 1840 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் நிறுவப்பட்டது. இதேவேளை பல் உபாதையினாலேயே உலகில் அதிகமானோர் அவஸ்தைப் படுவதாகவும் கணக்கெடுப்பொன்று தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக சுகாதார அமையம்

# WORLD HEALTH ORGANIZATION (WHO)



உலக சுகாதார அமையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜே.டபிள்யூ லீ

ஐக்கிய நாடுகள் சபை அமைப்பான உலக சுகாதார அமையமானது (World Health Organization) ஐ.நா.வின் சட்ட திட்டங்களுக்கு அமையச் சர்வதேச அளவில் சேவையாற்றி வருகின்ற ஒரு நிறுவனமாகும்.



1946 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச நாடுகளின் சுகாதார மாநாட்டின் தீர்மானத்தின் படி 1948 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழே இந்த உலக சுகாதார அமையம் நிறுவப்பட்டது.

## பணிகள்

இதன் அங்கத்துவ நாடுகளில், சுகாதாரத்தைப் பேணும் வகையில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதோடு, நோய்களைக் கட்டுப்படுத்தி, இல்லாதொழிப்பதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதே இந்த அமையத்தின் முக்கிய பணிகளாகும்.

மேலும், நாடுகளில் பரவிவரும் பல்வேறு வகையிலான தொற்று வியாதிகள் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வதுடன் அவற்றிற்கான நிவாரணங்கள் குறித்தும் இவ்வமைப்புக் கூடிய அக்கறை செலுத்தி வருகின்றது. சுகாதாரக் காப்புத் தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்களையும் ஏற்படுத்தி அவற்றை வழி நடத்தியும் செல்வதில் இவ்வமைப்புக் கூடிய கவனத்தைச் செலுத்துகின்றது.

அங்கத்துவ நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தராதரத்தை. மேல் நிலைக்குக் கொண்டு வருவதும் இதன் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதானால் சகலருக்கும் கூடிய வகையில் அதி உன்னதமான நற் சுகாதார நிலையை அமைத்துக் கொடுப்பதே உலக சுகாதார அமையத்தின் பிரதான பணி எனலாம்.



## குறிக்கோள்கள்

* குறிப்பாக வறிய மற்றும் கவனத்தில் கொள்ளப்படாத மக்கள் மத்தியில் அதிகப்படியான மரணங்கள் சம்பவித்தல், நோய்கள் ஏற்படுதல் தொடர்பாக ஆராய்தல், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நல்லதோர் சுகாதாரச் சூழலை ஏற்படுத்தல், மற்றும் சுற்றுப் புறச் சூழல், பொருளாதாரக் குறைபாடுகள் காரணமாக ஏற்படுகின்ற சுகாதாரக் கேடுகளையிட்டு அக்கறை செலுத்தல்.

* மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமையப் பிரதான உதவிகள் என்ற வகையில் செயற்படுத்தக் கூடிய சுகாதார நடைமுறைகளை அபிவிருத்தி செய்தல்.

* ஏற்புடைய சுகாதாரக் கொள்கைகளை விரிவுபடுத்தல், சமூக அபிவிருத்தித் திட்டங்களில் ஓர் அம்சமாகச் சுகாதாரம் பேணலையும் கவனத்தில் கொள்ளச் செய்தல்.

என்பன இவ்வமையத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

## அங்கத்துவ நாடுகள்

191 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன.

## நிர்வாக முறைமை

உலக சுகாதார அமையத்தின் 191 அங்கத்துவ நாடுகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றது. இந்த நிர்வாகக் குழுவானது வருடத்துக்கு ஒரு தடவை கூடுகின்றது. மேற்படி நிர்வாகக் குழு மேற்கொள்கின்ற தீர்மானங்கள் கொள்கைப் பகுப்புகள் ஆகியன அங்கத்துவ நாடுகளால் நியமிக்கப்படுகின்ற சுகாதார நிபுணர்கள் 30 பேரைக் கொண்ட அதிகாரம் பொருந்திய குழுவொன்றினாலேயே நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இந்தக் குழுவானது வருடத்துக்கு இரண்டு தடவைகள் விடயங்களைக் கூடி ஆராயும். உலக சுகாதார அமையத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 3800 ஆகும்.

## உலக சுகாதாரத் தினம்

உலகிலுள்ள மக்களின் சுகாதார நலனைக் கருத்திற் கொண்டு சுகாதாரத்தின் மீது மக்களைக் கூடிய அக்கறை கொள்ளச் செய்யும் இலக்கோடு உலக சுகாதார அமையமானது ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 7 ஆம் திகதியைப் பல்வேறு சுலோகத் தலைப்புகளின் கீழ், உலக சுகாதாரத் தினமாக அனுஷ்டித்து வருகின்றது. கடந்த ஏப்ரல் மாதம் அனுஷ்டிக்கப்பட்ட உலக சுகாதாரத் தினமானது "வீதிப்போக்குவரத்துப் பாதுகாப்பு" எனும் தலைப்பின் கீழேயே அனுஷ்டிக்கப்பட்டது.


இதன்படி போக்குவரத்து நெரிசல்கள், பாதுகாப்பற்ற நிலைமைகள் ஆகியன குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அவ்வாறே, இவ்வாறான சூழலை மாற்றியமைக்கும் போதிய திட்டங்களை முன்னெடுக்கும் தீவிரமான நடவடிக்கைகளிலும் உலக சுகாதார அமையமானது ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உலக சுகாதார அமையத்தின் குறியீடு



நடப்பு வருட உலக சுகாதார தினத்தைக் குறிக்கும் குறியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானத்தில் தொங்கும் பிணம்




நரசிம்மன்

மிகுந்த பீதியுடன் அந்தக் கரிய உருவங்களைப் பார்த்துக் கொண்டிருந்த பிரசாத்துக்குச் சுயநினைவுக்கு வரச் சில நிமிடங்கள் பிடித்தது. இருப்பினும் தனது மனதை இயன்ற அளவு தைரியப்படுத்திக் கொள்ள முயன்றான். அந்த உருவங்கள் ஏதோ பேசிச் சிரித்துக் கொள்வது அவனுக்கு இலேசாகக் கேட்டது. அவை என்ன பேசிக் கொள்கின்றன என்பதைக் கேட்பதற்குக் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்பதற்கு மிகுந்த முயற்சி செய்தான்.

பேச்சுக் குரல் கேட்டதே தவிர, என்ன பேசுகிறார்கள் என்பது கேட்கவில்லை. இன்னும் பிரசாத்தை மீண்டும் பயம் தொற்றிக் கொண்டது. 'உண்மையிலேயே அவை பேய்கள் தானோ? நான் அவற்றிடம் சிக்கிக் கொண்டேன் என்று சந்தோஷத்தில் சிரிக்கின்றனவோ என்று அவன் பயந்து போய் நின்றான். அப்போது....? சிரிப்பதை நிறுத்திவிட்டு அந்த உருவங்கள் பேசுவது அவனுக்கு நன்றாகக் கேட்டது.

**திகில் மர்மங்கள் நிறைந்த குறுநாவல்**

"போடா பைத்தியக்காரா?" ஓர் உருவம் மற்ற உருவத்தைப் பார்த்துக் கூறியது. "ஊரே பேய் பேய்ன்னு பயந்து சாவுது. இந்தப் பக்கம் யாரடா அவ்வளவு துணிச்சலோடு வாறது?" இந்த வார்த்தைகள் பிரசாத்தின் காதுகளில் கேட்டதும் அவனுக்கு இருந்த பேய்ப் பயம் போய்விட்டது. அப்படியானால் இவர்கள் பேய்கள் அல்ல. நம்மைப் போன்ற மனிதர்கள் தான்! பேய்கள் இல்லை மனிதர்கள் தான் என்று தெரிந்தவுடன் அவனுக்கு மிகுந்த தைரியம் ஏற்பட்டது. ஆனால் அவர்கள், தான் அங்கு சென்று இருப்பதைக் கண்டு தான் பேசிக் கொள்கிறார்களோ? என்று யோசித்தவுடன் சிறிது பய உணர்வு ஏற்பட்டது. தன்னை என்ன செய்வார்களோ என்ற பயம் தான் அது. இப்படி அவன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவர்கள் மேலும் பேசிக் கொள்வது அவனுக்குக் கேட்டது.



"இங்கு வாறவனுக்கு மச்சான், கையில இருக்கிற இரும்பால தலையில் ஒரே போடு போட, அந்த இடத்திலேயே முடிஞ்சிடுவான். நாளைக்கு பேய் அடிச்சு செத்துட்டான்னு எல்லோரும் பேசிக்குவாங்க. இதத்தானே மச்சான் இதுக்கு முந்தியும் செஞ்சி இருக்கிறோம். இப்ப எவனாவது வந்தான்னா நமக்குத்தான் மச்சான் சான்ஸ்."
"ஏன்டா அப்படிச் சொல்ற?" இப்படி மற்றவன் கேட்டான்.
"இல்ல மச்சான் பேய் பயத்துல கொஞ்ச நாளாய் இந்தப் பக்கம் யாருமே வாறது இல்லதானே?"
"ஆமா! அதுக்கு இப்ப என்ன?"
"அதனால் நமக்கும் கொஞ்ச நாளா யாரையும் கொலை செய்ய கிடைக்கல்ல தானே. மனுசருக்குப் பேய் பயம் கொஞ்சம் கொஞ்சம் போயிருச்சினா என்ன செய்றது!"
"அதுக்காக என்ன பண்ணனும்னு சொல்ற!"
"அடிக்கடி கொலை பண்ணனும் மச்சான். அப்பத்தான் இங்க பேய் இருக்குங்கற பயத்தை எல்லோர் மனசிலும் தக்க வச்சிக் கொள்ளலாம்."
இப்படிக் கூறிவிட்டு அவன் திரும்பவும் "ஹா!... ஹா"... என்று சிரித்தான். பிரசாத்துக்கு இப்பொழுது ஒன்று புரிந்தது. இங்கு நடந்த சாவுகளுக்கெல்லாம் காரணம் இந்தக் கொலைகாரர்கள்! இவங்களிடம் சிக்கினால் நம்மை நிச்சயம் கொன்றுவிடுவார்கள். இவர்களுக்குத் தெரியாமல் மெதுவாகத் தப்பிப் போய்விட வேண்டும்.

இப்படி நினைத்தவனுக்கு இன்னொரு யோசனையும் ஏற்பட்டது. இங்கு இவர்கள் ஏதோ சட்ட விரோதமான காரியம் செய்கிறார்கள். அது என்னவென்பதைக் கண்டு பிடிக்க வேண்டுமே. இப்படி அவன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவர்கள் பேச்சுத் தொடர்ந்தது. "நம்ம சரக்க குடிச்சவங்களில் பலர் நோய் வாய்ப்பட்டும், செத்தும் போனதால நம்மள கண்டு பிடிக்க பொலிஸ் ரொம்ப முயற்சி பண்ணிக்கிட்டு இருக்கு மச்சான்."

"சரக்குல ஏதோ விஷப்பாம்பு விழுந்து செத்தும், அதை விநியோகிச்சிட்டோம் இல்லயா!
அதால வந்தததுதான் இது."
"அதுக்காக சரக்கை வீசி நஷ்டப்பட முடியுமா மச்சான்?
"நான் அப்படிச் சொல்லலை சரக்கில பாம்பு, பூரான் மாதிரி விஷப்பூச்சிகள் விழுந்துடாம பாது காத்து வைக்கனும். நம்ம சரக்கை குடிக்கிறவங்க சாதாரணமாவே கொஞ்ச நாளில் மண்டைய போட்டுடுவாங்க. அதுல விஷத்தை வேற போடனுமா?" இப்படி கேட்டுவிட்டு அவன் திரும்பவும் சிரித்தான்.

பிரசாத்துக்கு இப்போது நன்கு புரிந்தது. "இவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். அதற்குப் பொருத்தமான இடத்தைத் தான் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். இந்தக் கள்ளச் சாராயத்தைக் குடித்துத்தான் அநேகர் நோய் வாய்ப்பட்டும், இறந்தும் இருக்கிறார்கள். இவர்களை விட்டு வைத்தால் நாட்டுக்கே ஆபத்து. இவர்கள் கண்ணில் படாமல் இங்கிருந்து எப்படி போவது? இவர்களிடம் சிக்கினால் நிச்சயம் தீர்த்துக் கட்டிவிடுவார்கள் என்ன செய்வது" என்று யோசித்தான்.

மெதுவாகப் பிரதான பாதைக்குப் போய் இருளில் மறைந்து, மறைந்து திரும்பவும் நகருக்கே போய் விட்டால்....! எப்படியும் தப்பிவிடலாம். இப்போது அவன் மனதில் பேய்ப் பயம் தீர்ந்து விட்டிருந்தது. இப்படித் தீர்மானித்துக் கொண்டவன் பிரதான பாதையை நோக்கி ஒற்றையடிப்பாதையூடாக மெதுவாக நடந்தான். மரங்கள் இருந்ததால் அவன் ஓரளவுக்கு மறைந்து செல்வது வசதியாக இருந்தது. மறைந்து, மறைந்து அவன் நடந்து சென்று சிறிது தூரம் இறங்கிச் சென்றால், அவர்கள் பேசுவதை ஓரளவுக்குக் கேட்கலாம் என்று தோன்றியது. ஆனால், பயம் ஒரு பக்கம் அவனை வாட்டி வதைத்தது. எப்படி அருகில் செல்வது என்று சிந்தித்தான் அப்பா அவனுக்கு அடிக்கடி கூறும் தைரிய வார்த்தை நினைவுக்கு வந்தது.

"ச்சே! இப்படிப் பயந்து சாகக் கூடாது என்ன தான் நடந்துவிடப் போகிறது என்று பார்த்து விடலாம்". இப்படித் தீர்மானித்துக் கொண்ட அவன் மெதுவாகப் பாதையை விட்டு இறங்கி அந்த ஒற்றையடிப்பாதை ஊடாக மறைந்து, மறைந்து நடக்கத் தொடங்கினான். அடர்த்தியாக மரம், செடி, கொடிகள் வளர்ந்திருந்தபடியால் மறைந்து செல்வது அந்த இருளில் அவனுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை.

சிறிது தூரம் சென்றதும் அப்படியே நின்றுவிட்டான். இப்பொழுது அவர்கள் பேசிக் கொள்வது தெளிவாகக் கேட்டது. அந்தக் கரிய உருவங்களில் ஒன்று அட்டகாசமாகச் சிரித்தது. "ஹஹ்ஹஹ்! ஹா....ஹா....ஹா" என்று அந்தச் சிரிப்பு ஒலி நீண்ட நேரமாகக் கேட்டது.

**"ஊரே பேய் பேய்ன்னு பயந்து சாவுது. இந்தப் பக்கம் யாரடா அவ்வளவு துணிச்சலோடு வாறது?" இந்த வார்த்தைகள் பிரசாத்தின் காதுகளில் கேட்டதும் அவனுக்கு இருந்த பேய்ப் பயம் போய்விட்டது!**

கொண்டிருந்தான்.

அப்பொழுது .....சற்றும் எதிர்பாராத வகையில் அவன் கையை ஓர் இரும்புக் கரம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. அதிர்ச்சியடைந்த அவன் எதிரில் நோக்கினான். நீளமான பற்களை "நறநற"வென்று கடித்தபடி கன்னங்கரேலென்ற ஒரு பயங்கர உருவம் அவனைக் கடித்துக் குதறுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தது. "ஆ"என்று அலறிய அவன் வாயிலிருந்து சத்தம் வர மறுத்தது.

தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்று நிலக்கரியைப் புசித்து நீர் பருகிய புகையிரதம் இன்று கடலுக்கடியில் ஆகாய விமான வேகத்தில் ஓடும் அதிசயம்!




# சிக்குப்புக்கு... சிக்குப்புக்கு ரயில் வண்டி சீராக ஓடிவரும்... ரயில் வண்டி

புகையிரத சேவ்யை மிகவும் பயனுள்ள முறையில் பயன் படுத்தினால் போக்குவரத்து நெரிசலுக்கும், அளவுக்கதிகமான வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தவும் தீர்வாக அமைத்துக் கொள்ளமுடியும்.

மேற்கு நாடுகள் பொதுப் போக்குவரத்தில், பஸ் சேவையை விடப் புகையிரத சேவையில் கூடுதலான கவனம் செலுத்தி அதை அபிவிருத்தி செய்துள்ளன. அதனால் நல்ல பயன் கிடைத்துள்ளது.



இலங்கையின் புகையிரத சேவையின் ஆரம்பம், நிலக்கரியைப் புசித்து, தண்ணீர் பருகிக் கொண்டு, கரும் புகை கக்கிக் கொண்டு சென்ற புகையிரதங்களுடனாகும். அந்த நிலையில் இருந்த இன்றைய நிலையில் ஒரு சிறிதளவுதான் புகையிரத சேவையில் முன்னேற்றம் காண முடிந்திருக்கின்றது.

ஆனால் ஐரோப்பிய நாடுகள் விமானத்தின் வேகத்தில் செலுத்தக் கூடிய புகையிரதங்களைச் சேவையில் ஈடுபடுத்துவது வரையில் இன்று வெற்றி கண்டிருக்கின்றன. அதிலும் நிலத்திற்குக் கீழ் ஓடும் சுரங்க ரெயில் சேவை முக்கியமானதாகும். இந்தச் சுரங்க ரெயில் சேவை 150 வருடங்களுக்கு முன்பே இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இங்கிலாந்தில் 1807 ஆம் ஆண்டு புகையிரத சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. 1863 ஆம் ஆண்டு இங்கிலாந்து சுரங்க ரெயில் சேவையை அறிமுகம் செய்தது. மெட்ரோபொலிடன் என்ற பெயரில் அந்தப் புகையிரதம் ஓடியது.

## மேற்கு நாடுகளில் மக்கள் மனதில் இடம் பிடித்த புகையிரத சேவை

முதல் கட்டத்தில் லண்டனில் பிஷொப் வீதி மற்றும் ஹரிங்ரன் பகுதியை இணைக்கும் வகையில் 4 மைல் தூரப் புகையிரதப் பாதை (சுரங்க) அமைக்கப்பட்டது. 1884 இல் இது விரிவுபடுத்தப்பட்டது.

இந்த அமைப்பிலான சுரங்கப் புகையிரதச் சேவையில் முக்கிய விடயமாக அமைந்தது மூடப்பட்ட பாதை முறையாகும். இவையே சுரங்க வடிவம் பெற்ற புகையிரதப் பாதைகள்.

இந்தப் பாதைகளில் அனேகமான புகையிரதங்கள் இருந்தன. 1890 இல் மின்சார புகையிரத சேவை விஸ்தரிக்கப்பட்டது. இவ்வாறாகப் புகையிரத சேவையை ஆரம்பித்த இங்கிலாந்து 1905 ஆல் மின்சார புகையிரதச் சேவையை விஸ்தரித்தது.

## சுரங்க ரெயில் சேவையில் இங்கிலாந்து முன்னோடி

1915 ஆம் ஆண்டளவில் மின்சார சுரங்கப் புகையிரதப் பாதைகள் பெருமளவில் அமைக்கப்பட்டன. இதில் 295 மைல் தூரப் புகையிரதப் பாதை இங்கிலாந்தில் முக்கியமானதாக அமைந்தது. இந்தப் பாதையில் 277 தரிப்பிடங்கள் இருந்தன. ஒவ்வொரு வருடத்திலும் 67 கோடி மக்கள் இவ்வாறான சுரங்கப் புகையிரதங்களைப் பயன்படுத்துகின்றனர். ஒரு நாளைக்கு 10 லட்சம் பேர் பயன் படுத்துகின்றனர்.

இவற்றில் பெரும்பாலான புகையிரத சேவைகளை நிலத்தடி குழு நிறுவனமே (Under ground Group) சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்றது.

1948 ல் லண்டனில் இந்தச் சேவை அரச போக்குவரத்து அதிகாரிகளின் கைகளுக்கு மாறியது. இந்த அமைப்பில் இருவழி முறைச் சேவைகள் இருந்தன.

சிறிதளவு தூரம் நிலத்திற்கு மேலும் என்ற அடிப்படையில் மக்கள் ஏறி இறங்க வசதியாக அமைக்கப்பட்டது. ஆரம்பக் கட்டத்தில் 04 அடி அகலமான பாதையில் 6-8 பெட்டிகள் வரையில் தொடுக்கப்பட்ட புகையிரதங்கள் பொஸ்டனில் ஓடின. ஒரு பெட்டியில் 44 பிரயாணிகள் இருந்தனர். நின்று கொண்டு பிரயாணம் செய்யத் தனியான பெட்டிகள் இருந்தன. ஆனாலும் இந்தப் புகையிரதங்கள் மிகவும் மெதுவாகவே சென்றன. ஒரு மணித்தியாலத்திற்கு 20-40 மைல் என்ற வேகமே காணப்பட்டது.

இவ்வாறாக இங்கிலாந்தின் வளர்ச்சியடைந்த புகையிரத சேவை இன்று அனைத்தும் கணனி மயப்படுத்தப்பட்டுத் தன்னியக்க சேவையாக மாற்றப்பட்டிருக்கின்றது. புகையிரதத்திற்குள் நுழையும் போது டிக்கட் வழங்குவது, அதனைச் சோதனை செய்வது, வெளியேறும் போது டிக்கட்டைச் செயலிழக்கச் செய்வது உட்பட எல்லாப் பணிகளும் இயந்திரத்தின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன.


இதில் இன்றைய அதிவேக புகையிரதச் சேவை (Bullot Train) இத்துறையிலான உச்சக்கட்ட முன்னேற்றமாகும். இந்தப் புகையிரதங்கள் மணிக்கு 240-450 மைல்கள் வரை வேகத்தில் நீண்ட தூரம் செல்லக் கூடியனவாகும். அத்தோடு கடலுக்கடிச் சுரங்கப் புகையிரதப் போக்குவரத்து இத்துறையிலான நவீன வளர்ச்சி எனலாம்.

### உலகில் சுரங்கப் புகையிரதச் சேவைகளைக் கொண்டுள்ள நகரங்கள் வருமாறு :

1. பாரிஸ்
2. ஹம்பர்க்
3. ஸ்ரொக்ஹோம்
4. ரோம்
5. ஒஸ்லோ
6. கொபன்ஹெகன்
7. பிலடெல்பியா
8. டொரொன்டோ
9. பெர்லின்
10. வியன்னா
11. பர்சிலோனா
12. டோக்கியோ
13. நியூயோர்க்
14. சிகாகோ



சுரங்க ரெயில் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக் களம் Sports

தயாரிப்பு: வி.ரெட்லி ஹெரிசன்



'யூரோ' கிண்ண உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த கிரேக்க அணியினர் வெற்றிக் கிண்ணத்துடன் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதையே படத்தில் காண்கிறீர்கள்

படம் : ஏ.எப்.பி

## ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்

## இலங்கைக்கு ரூ.15 கோடி இலாபமாக கிடைக்கின்றது!

ஜூலை 16 தொடக்கம் ஆகஸ்ட் 2 ஆம் திகதி வரை நடைபெறுகின்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளினூடாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஒன்றரை மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூ.15 கோடி) வருமானம் கிடைப்பதாகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

6 நாடுகள் கலந்து கொள்கின்ற இந்தப் போட்டிகளை, ஆசியக் கிரிக்கெட் சம்மேளனமே ஏற்பாடு செய்து நடத்துகின்றது. மேற்படி போட்டியாளர்களுக்கான அனுசரணை, தொலைக்காட்சி ஒளிபரப்பு ஏற்பாடுகளையும் ஆசியக் கிரிக்கெட் சம்மேளனமே மேற்கொண்டுள்ளது. மைதானங்களை வழங்குவதும் மற்றும் ஏனைய உதிரி ஏற்பாடுகளை மாத்திரமே இலங்கை மேற்கொண்டுள்ளது.



படம்:ஏ.எப்.பி

ஆசியக் கிண்ண போட்டிகளுக்கு முன்னதாக இந்திய அணியினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த காட்சி

நடைபெறுகின்ற இந்த ஆசியக் கிண்ணப் போட்டிகளின் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை ESPN என்ற நிறுவனத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. இதற்கென இந்நிறுவனம் 19 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இதில் ஒரு மடங்கு ஆசிய கிரிக்கெட் சம்மேளனத்திற்கும், மிகுதியில் பெரும்பகுதி போட்டியில் பங்கு கொள்ளும் பிரதான 4 நாடுகளுக்கும், இன்னுமொரு பங்கு எமிரேட்ஸ், ஹொங்கொங் அணிகளுக்கும் எனப் பகிர்ந்தளிக்கப்படும்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹொங்கொங், எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் போட்டியில் கலந்து கொள்ளும் என்பது நாம் அறிந்ததே!

## பாகிஸ்தான் அணிக்குப் பத்து வருடங்களுக்குள்

## ஏழாவது பயிற்றுவிப்பாளராக பொப்கூல்மர்!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பொப்வுல்மர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவராவார். ஜூலை 2 ஆம் திகதி தொடக்கம் தனது பணியினைப் பொறுப்பேற்றுள்ள இவர் இதற்கு முன்னர் தென் ஆபிரிக்க அணிக்குப் பயிற்றுவிப்பாளராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்த ஜாவிட் மியான்டாட்டின் 2 வருட ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு இன்னும் 11 மாதங்கள் எஞ்சியிருந்த நிலையிலேயே, அவர் இப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுப் புதிய பயிற்றுவிப்பாளராக பொப்வுல்மர் நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் இந்தியாவுடனான போட்டிகளில் பாகிஸ்தான் அணி படு தோல்வியைச் சந்தித்ததின் பிரதிபலனாகவே ஜாவிட் மியான்டாட் பயிற்றுவிப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். 1998 ஆம் ஆண்டு முதல் மியான்டாட் இவ்வாறு பதவி நீக்கம் பெற்றிருப்பது இது மூன்றாவது தடவையாகும். இதேவேளை கடந்த பத்து வருடங்களுக்குள் பாகிஸ்தான் அணிக்குத் தெரிவாகியுள்ள 7 வது பயிற்றுவிப்பாளர் பொப்வுல்மர் என்பதும் கவனிக்கத் தக்கது.

பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்றுவிப்பாளர் பொப்வுல்மர் பாகிஸ்தான் அணியினருக்குப் பயிற்சி வழங்குவதைப் படத்தில் காண்கிறீர்கள்




படம்:ஏ.எப்.பி

## தரமற்ற ஆடை குறித்து அதிருப்தி!

கழக மட்ட உதைப்பந்தாட்ட அணிகளுக்கென இம்முறை வழங்கப்பட்டுள்ள உடைகள் தரமற்றவையாக உள்ளதாக அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கழகங்களினால் இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனத்திற்குப் புகார் செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி உடைகள் புறக்கணிக்கப்பட வேண்டிய நிலை தோன்றியிருப்பதாகவும் அறிய வருகின்றது. இலட்சக்கணக்கில் செலவிட்டு இந்த உடைகளைத் தைக்கும் கட்டணப் பொறுப்பினை, சம்மேளனத்தின் அதிகாரியொருவரே பெற்றிருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

## விம்பிள்டனை வெற்றி கொண்ட ரஷ்ய வீராங்கனை



ரொஜர் ஃபெட்

சர்வதேச மட்டத்தில் நான்கு வகை டென்னிஸ் போட்டிகள் வருடாந்தம் நடைபெறுவதுண்டு. அவற்றுள் விம்பிள்டன் போட்டியே பிரதானமாகக் கருதப்படுகின்றது. இதன்படி நடப்பு (2004) வருடத்திற்கென விம்பிள்டன் போட்டிகளில் மகளிர்ப் பிரிவுப் போட்டிகளில் ரஷ்ய நாட்டின் வீராங்கனையான மாரியா ஷாபரோவா வெற்றியீட்டியுள்ளார். ஆண்கள் பிரிவில் சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த ரொஜர் ஃபெட் என்பவர் வெற்றியீட்டியுள்ளார்.

மகளிர் பிரிவு போட்டிகளில் உலக முதல் தர வீராங்கனையான செரினா வில்லியம்ஸை 6-1, 6-4 என்ற அடிப்படையில் தோல்வியடையச் செய்த மாரியாவின் வெற்றி குறித்து விம்பிள்டன் ரசிகர்கள் பெரிதும் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

"மாரியாவின் வெற்றியானது விம்பிள்டன் போட்டிகளில் புதியதோர் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது." எனச் செரினா வில்லியம்ஸ், மாரியாவைப் பாராட்டியுள்ளார். விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் வெற்றியீட்டிய முதலாவது ரஷ்யப் பெண் என்ற பெருமையினையும் மாரியா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


இதேவேளை, விம்பிள்டன் ஆண்களுக்கான போட்டியில் அமெரிக்க வீரரான ரொடிக் என்டாரை தோற்கடித்தே சுவிற்ஸர்லாந்து வீரர் வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளார். இது அவரது அடுத்தடுத்த இரண்டாவது வெற்றியாகும். தனது வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ரொஜர்.. "தன்னால் இதனை நம்பவே முடியவில்லை எனவும், தனது வெற்றியையிட்டு மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்."

ஏற்கனவே, இந்த வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற அவுஸ்திரேலியப் பகிரங்கப் போட்டியிலும் தொடர்ந்து நடந்த பிரான்ஸ் பகிரங்கப் போட்டியிலும் வெற்றியீட்டியிருந்த ரொஜரின் அடுத்த இலக்கு எதென்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கத்தை வெல்லுவதுதானாம்!.



மாரியா ஷாபரோவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் பாடசாலைகளிலும் பலவிதமான நிகழ்ச்சிகள், போட்டிகள், வைபவங்கள் நடைபெறலாம். அவ்வ தொடர்பான புகைப்படங்களை எமக்கு அனுப்பி வைத்தால், அவற்றை 'விஜய்' யில் பிரசுரிக்கத் தயாராக உள்ளோம். படத்துடன் அவற்றின் விபரங்களையும் எழுத மறவாதீர்கள்.

'விழா உலா'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு







கே/மா/நாங்கூருகம முஸ்லிம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் போது பிடிக்கப்பட்ட படம். அதிபர் எம்.ஏ.எம்.முபாரக்கின் தலைமையில் பாடசாலை ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.



சி.திலானி,
தரம் 7C ப/தமிழ்
ம.ம.வித்தியாலயம்,
பதுளை.



பி.ப்ரிதிவி சாநுஜா, தரம் - 5B,
கிங்ஸ்டன் சர்வதேச
பாடசாலை, கொழும்பு - 15



யோ.கலைக்கமல்,
தரம் - 4A, கதிரேசன்
கனிஷ்ட வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.



இ.நுபசாளினி,
தரம் - 10 பு/முந்தல்
த.வித்தியாலயம்,
முந்தல்.



எஸ்.கஜன் பிரகாஸ், தரம் - 2B,
நு/தலவாக்கலை
த.ம.வித்தியாலயம், தலவாக்கலை.



பர்வின் பாருக், தரம் - 8B,
முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு - 04



எம்.ரீகாஸ், தரம் - 10B,
அறபா தேசிய பாடசாலை,
வெலிகாமம்.




எச்.நௌசிர் மொஹமட்,
தரம் - 8D, புனித.சூசையப்பர்
ம. வித்தியாலயம், மஸ்கெலியா.



எ.ப்.ஸஹ்ரா, தரம் - 3B,
ஸகிரா பாடசாலை,
மாவனெல்லை.




பிள்ளைகளே;
நீங்களும் உங்கள் கைவண்ணங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம்.
உங்கள் சித்திரங்களை A4 தாளில் மாத்திரம் வரைந்து பெயர் விபரங்களைச் சித்திரங்களின் பின்புறமாக எழுத [illegible] அனுப்பவேண்டிய முகவரி:-

'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

கல்வயல் வே.குமாரசாமியின்

# பரப்பரப் பாட்டுக்கள்

## காற்று

காற்று வந்தது - இன்று
காற்று வந்தது
அருகிருந்த
சருகைத் தூக்கிச்
சுருட்டிச் சென்றது.

நேற்று வந்தது - காற்று
நேற்று வந்தது
அருகிருந்த
மரத்தின் கிளையை
முறித்துச் சென்றது.

காற்று வந்தது - இன்றும்
காற்று வந்தது
ஏற்றிவிட்ட
பட்டம் உயர
இரைய வந்தது.

நேற்று வந்தது - காற்று
நேற்று வந்தது
மண்ணை அள்ளிக்
கண்ணில் போட்டு
விண்ணில் நின்றது.

## பெண் பனை

அண்ணாந்து பார் - பனையை
அதிலே தொங்கும் - குலையை
தண்ணீர் ஊற்ற - இல்லை
தழைக்க வைக்க - இல்லை
பெண் பனையே - காய்க்கும்
பிஞ்சை நுங்கு - என்போம்.
உண்பதற்குப் - பனங்காய்
உருசியாக - இருக்கும்.

## பூவும் தேன் ஈயும்

தேனே தேனே பூத்தேனே
தேடித் தேடிப் பார்த்தேனே
தேனீ தேனீ வா தேன் ஈ
தேடிய தேன் நீ தேன் ஈ நீ
வான் ஈ மழை போல் வா நீ வா
வடிவாய் புடிக்க வா தேனீ

## தேன் குடிக்கும் குருவி

சின்னச் சொண்டுக் குருவி
தேன் குடிக்கும் குருவி
சின்னச் சின்னச் செட்டை!
சின்னக் காலும் கட்டை!

சின்ன மணிக் கண்கள்
சிறகிலே வண்ணங்கள்
அதனைப் பிடிக்க பதுங்க!
காற்றில் பறக்கும் ஒதுங்க!

சின்னச் சின்னக் குருவி
தேன் குடிக்கும் குருவி
இன்னும் வர வில்லை!
இன்றும் எங்கே போச்சோ?


## வாழையும் நாமும்

வாழை மரம் மேலே
வாழைக் குட்டி கீழே
வாழைக் குலை மேலே
வாழைப் பூ அதன் கீழே

கீழே குலையை இறக்கி
ஆளுக்கு ஒன்று கொடுத்து
வாழைப் பழம் தின்போம்
வயிறு நிறையும் நன்றாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்விரு படங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.





## பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. கண், காது, மூக்கு, வாய், மெய் என்பன (ஐம்பொறி, ஐம்புலன்)
2. வயலும், வயல் சார்ந்த இடமும் (குறிஞ்சி, நெய்தல், மருதம்)
3. நீ கோயிலுக்குப் போ. நீ என்பது, (தன்மை, முன்னிலை, படர்க்கை)
4. ஜனாதிபதி ஆணைக்குழு மிக விரைவாக (செயற்பட்டார், செயற்பட்டது, செயற்பட்டார்கள்)
5. 25 வது ஆண்டு நிறைவு விழா (வைர விழா, வெள்ளி விழா, பொன்விழா)

## இணைக்க

| | |
|---|---|
| புத்தகம் | இலை |
| வானம் | செய்தி |
| மரம் | வாகனம் |
| பாதை | பாடம் |
| பத்திரிகை | மேகம் |

## இடைவெளியை நிரப்புங்கள்

1. 5, 7, ----, 6, ----, -----
2. 3, ----, 3, 12, ----, 15
3. AE, ----, CC, ----, EA
4. ----, ங், ----, ட், ----
5. ----, E, I, -----, U

## கணக்குப் புதிர்

விமலாவின் வயது 40. கமலாவின் வயது நிமலாவின் வயதிலும் பார்க்க இரு மடங்காகும். கமலா விமலாவைப் பார்க்க 16 வருடங்கள் இளையவள்.
1. நிமலாவின் வயது என்ன?
2. கமலாவின் வயது 30 ஆகும்போது விமலாவின் வயது என்ன?
3. சாமிலாவின் வயது நிமலாவின் வயதிலும் இரு மடங்கெனின், சாமிலாவின் வயது என்ன?


## பின்வரும் பந்தியிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக

தமிழ் மொளி தொண்மை வாய்ந்தன. எனவே அதன் தொன்மையை நிரூபிக்கப் போதிய ஆதாரங்கல் கிடைக்கவில்லை. ஆனால் கிடைக்கப் பெற்ற ஆதாரங்களையும், இலக்கியங்களையும் வைத்து கிரிஸ்து ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இலக்கி வறலாரானது ஏலு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலிடம் வகிப்பது சங்க காளம் ஆகும்.

## அறிவுக்கு விருந்து


தயாரிப்பு
நுஸ்பா கௌஸ்

## வழிகாட்டுங்கள் பார்க்கலாம்



## முதல் படத்தைப் போன்ற உருவத்தைத் தருகின்ற பகுதியைக் குறிக்கும் கட்டத்தின் கீழ் கோடிடுக

A B C D



## குறுக்கெழுத்துப் போட்டி, இல. 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 பூ | 3 | ■ |
| | ■ | 4 | | | ள் |
| 5 | 6 தா | | | ■ | 7 |
| ■ | 8 | | | ஷ் | ■ |
| 9 | | ■ | | ■ | 10 |
| 11 | த | | ■ | 12 | |

**மேலிருந்து கீழ்**
1. மூவிடங்களில் ஒன்று
2. ஈரானின் பாம் நகரை முற்றாக சேதப்படுத்திய இயற்கை அனர்த்தம்
3. கூந்தல்.
4. அழகு (குழம்பி)
6. நேரம் பிந்துவதை இவ்வாறு அழைக்கலாம் (குழம்பி)
7. கூரிய ஆயுதமொன்று (தலைகீழ்)
9. நிறமொன்று
10. மனுச்சக்கரவர்த்தியின் ஆட்சியுடன் சம்பந்தப்பட்ட சொல்

**இடமிருந்து வலம்**
1. நோய் பரவமுன் போடப்படுவது
4. வகை என்பதன் பன்மை (குழம்பி)
5. திறந்த வெளி
8. பூ (குழம்பி)
9. பெரியது என்பதைக் குறிக்கப் பயன்படும் சொல் (குழம்பி)
11. கணவனை இழந்த பெண்
12. 'ப்ளோரன்ஸ் நைட்டிங் கேல்' மூலம் பிரபலமான தொழில்



பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பாடசாலை :- ..............................

வகுப்பு :- ..............................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுரக் கட்டங்களில் நிரப்பிக் கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி ஜூலை 29ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
2. சரியான விடைகளை எழுதியோரில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும், 3 அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் அடுத்துவரும் இதழ்களில் பிரசுரமாகும்.

எமது முகவரி

குறுக்கெழுத்துப் போட்டி - 9
"வீஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 07இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | ண் | டி | 2 த | ன் | ■ |
| ல் | 3 க | ■ | ரு | ■ | 4 மா |
| ல | ■ | 5 க | ண | னி | ■ |
| 6 வ | 7 ச | ன | ம் | ■ | 8 வே |
| ன் | 9 தி | வா | ■ | ■ | ட் |
| ■ | ■ | 10 ன் | பொ | ணா | டை |

பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. ஆர்.எப்.நுஸ்ரா, தரம் $6^{B}$, அ/கெகிராவை மு.ம.வி,
2. கே.அருண்பிரசாந்த், தரம் $8^{B}$, தூய தோமயர் கல்லூரி, பண்டாரவளை.
3. எம்.என்.எப்.சிப்னா, தரம் $9^{B}$, அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, முருதலாவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்த எழுத்தாளர்

# மார்க்சிம் கோர்க்கி

"புத்தகங்களின் வாயிலாக வசதி படைத்தவர்களின் வாழ்க்கை முறையைச் சித்தரிப்பதிலும், புதுமைகளை, புதுப்புது நிகழ்வுகளை சதா எழுதிக் கொண்டு, கல்வி எனும் போதைக்குள் சிக்கியிருந்த நான், மனிதர்களிலும் பார்க்க புத்தகங்களே அழகானது, மனதைக் கவர்ந்திழுக்கக் கூடியது என மிகக் குறுகிய கண்ணோட்டத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தேன். புத்தகம் எனும் மாயைக்குள் வாழ்க்கையின் யதார்த்தத்தைத் தேடிப் பார்க்கப் புறப்பட்ட நான், வாழ்க்கையில் சிறிது குருடனாகி விட்டேன் என எண்ணுகிறேன். எவ்வாறாயினும், வழிகாட்டும் ஆசான்கள் மத்தியில் அதி உன்னத, உயர்ந்த ஆசான் நிஜ வாழ்க்கையே"




மார்க்சிம் கோர்க்கி

உலகப் புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளரான மார்க்சிம் கோர்க்கி தன்னைப் பற்றி எழுதிய கட்டுரையில் மேற்குறிப்பிட்டவாறு கூறியுள்ளார். சோவியத் தேசத்தின் 1917 அக்டோபர் புரட்சிக்குப் பெரும் வெற்றியை ஈட்டித் தந்த ரஷ்ய எழுத்தாளர் வரிசையில் மார்க்சிம் கோர்க்கி முதல் ஸ்தானத்தை வகித்துள்ளார். ரஷ்யப் புரட்சிக்காகத் தமது எழுத்துப் பணி மூலம் மக்களுக்குக் கிளர்ச்சி ஊட்டியதுடன் அவர்களின் துன்ப துயரங்களுக்கான காரணங்களை அவர்களுக்கு விளங்கப் படுத்தினார்.

அத்துடன் அவரின் பணி முடிந்து விட்டதாக நினைக்கவில்லை. புரட்சிக்குப் பின் ஸ்தாபிக்கப்பட்ட புதிய ஐக்கிய சோசலிச சோவியத் ரஷ்ய ஒன்றியத்தை கட்டியெழுப்பவும் அதனைப் பாதுகாக்கவும் உதவி புரிந்தார். அதனால் யதார்த்த வாத இலக்கியத்தின் மூலகர்த்தா மார்க்சிம் கோர்க்கி அவர்களே என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அறுபத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்த மார்க்சிம் கோர்க்கி 1868 ம் ஆண்டு ரஷ்யாவில் "நிஸ்னி நவகுரோத்" நகரத்தில் ஒரு சிறிய குடிசையில் பிறந்தார். அந்நகரம் இன்று கோர்க்கியின் பெயரால் அழைக்கப்படுகின்றது. அவரது உண்மையான பெயர் "அலெக்ஸி பெஸ்கோவி" என்பதாகும். சிறு பராயத்திலேயே தாய், தந்தையரை இழந்த கோர்க்கி ஒரு போதும் பள்ளியில் சென்று கற்கவில்லை. தனது பாட்டன் பாட்டியிடமே வளர்ந்தார். பாட்டியே அவருக்குப் படிப்பித்தார்.

எனினும் தனது ஆகாரத்திற்கு ரொட்டித் துண்டையேனும் பெற்றுக் கொள்ள ஏதாவதொரு தொழிலில் ஈடுபட வேண்டியிருந்தது. வாழ்வதற்காகப் பல கஷ்டமான தொழில்களில் ஈடுபட்ட போதும் அவர் புத்தகங்களை வாசித்தார். அவர் வாசித்த புத்தகங்கள் அவரின் எஜமானர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. எனினும் அவர் புத்தகம் வாசிப்பதை நிறுத்தவில்லை. பல சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் எழுதிய அவர் தனது உயர்ந்த படைப்பான "தாய்" எனும் நாவலை 1906 ஆம் ஆண்டு எழுதி முடித்தார். 1905 ஆம் ஆண்டு முதலாவது ரஷ்யப் புரட்சி தோல்வியுற்றபோது நாடு கடத்தப்பட்ட கோர்க்கி வெளிநாட்டிலிருந்தே இதை எழுதி முடித்தார்.

அமெரிக்காவிலிருந்து எழுதப்பட்ட இந்நூல் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தினரின் போராட்டத்திற்கு மிகவும் உந்து சக்தியாக இருந்ததால் அக்காலத்தில் (சிறந்த இலக்கியத்திற்கான) சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டது.

கோர்க்கி அக்காரணத்தினாலேயே தனது துன்ப துயர பருவத்தைப் பற்றியும் எழுதினார். அதற்காக "இளமைப் பருவம்" "மக்களுக்காக" என்ற நாவல்களையும் வெளியிட்டார். "க்லின் உடன் வீட்டு வாழ்க்கை" எனும் நாவல் நான்கு பகுதிகளாக வெளியிடப்பட்டது. அந்த நாவலை எழுதி முடிக்கப் பத்து வருடங்கள் பூர்த்தியாகியதாகக் கூறியுள்ளார்.

மார்க்ஸிம் கோர்க்கி அவரது சொந்தக் கற்பனையில் சஞ்சரித்து இலக்கியம் படைக்கும் எழுத்தாளராக இருக்கவில்லை. அவர் மக்களுடனிருந்து செயல்படும் எழுத்தாளராகவிருந்தார்.

மக்களின் வாழ்க்கையைப் பற்றி அவரின் மனதினுள் எழுந்த பரிவும் பாசமும் அவரின் பேனா முனைக்கு உரமூட்டியது.

இலக்கியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் மட்டுமல்லாது வெவ்வேறு கட்டுரைகளையும் எழுதினார். தனது மரணம் ஏற்படும் வரையிலும் சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் பிரதான செயலாளராகப் பணியாற்றிய கோர்க்கி உலகிலுள்ள முற்போக்கு எழுத்தாளர்களுக்கு ஒரு களம் அமைத்துக் கொடுக்கப் பாடுபட்டார். தன்மீது பற்று வைத்திருக்கும் எழுத்தாளர்களைப் பற்றி மட்டுமல்லாது புரட்சியாளர்களின் வாழ்க்கைகளைப் பற்றியும் கட்டுரைகள் எழுதினார். வீ.ஐ.லெனின், லியோ டால்ஸ்டாய், அன்டன் செக்கோப் ஆகிய சிரேஷ்ட மனிதர்களைப் பற்றிய கட்டுரைகளையும் வரைந்தார். அக்கட்டுரையின் வாயிலாக அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் பற்றி மக்கள் மத்தியில் கருத்துக்களை விதைத்தார்.

இளம் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து அவர்களின் இலக்கியத்துறையை ஒரு புதிய வழியில் இட்டுச் செல்வது கோர்க்கியின் மற்றுமொரு உன்னத வேலைத்திட்டமாகவிருந்தது. இலக்கியக் கவிதைகள் எழுதுவதிலும், சாகித்திய சங்கங்கள் நிறுவி அதனூடாகப் புதிய சஞ்சிகைகளை ஆரம்பித்து நடத்துவதையும் தமது வாழ்க்கைக் குறிக்கோளாக எடுத்துக் கொண்டார். சிறிய குடிசைக்குள் பேனாவுடனும் பல காகிதத் துண்டுகளுடனும் முடங்கித் தனியாகக் கிடக்கும் கோர்க்கி தனி மனிதனல்ல. இவர் தனது எழுத்துத் துறையினூடாக மக்களுக்கு மத்தியில் மகத்தான தொண்டாற்றும் செயல் வடிவம் கொண்டவராவார். எதிரிகள் மிலேச்சத்தனமானவர்களின் அடிவருடிகள், சிறு முதலாளித்துவவாதிகள் ஆகிய நாடகங்களில் கோர்க்கி புகுத்தியிருந்த கருத்துக்கள் சமூக அநீதியுடன் ஆட்சி நடத்தும் கொடூர ஆட்சியாளர்கள் வர்க்க பேதங்களைப் பிரித்தார் என்ற காரணங்களுக்காக சார் மன்னர் ஆட்சியில் கோர்க்கிக்குச் சிறைத் தண்டனைக்கு வழி கோலியது. ஆயினும், சிறைவாசம் கோர்க்கியின் அரசியலுக்கோ அல்லது படைப்புகளுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தவில்லை.

> ஒரு படைப்பாளி தனது தேசத்திற்கு, எழுத்துத்துறையின் மூலம் தனது பங்கைச் செய்யமுடியும்! இலக்கியச் சுவையை மட்டும் ரசிக்க எழுதுவதோடு மட்டும் நின்றுவிடாது, மனிதர்களின் சிந்தனையை வளர்ப்பதற்கும், அதனூடாக முழுச் சமுதாயமும் மேன்மையடையச் செய்யவும் அர்ப்பணிப்புடன் செயல் பட்ட உயரிய மனித நேயம் கொண்ட மார்க்சிம் கோர்க்கியிடமிருந்து உதாரணங்களை நாம் கற்றுத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

மார்க்சிம் கோர்க்கி உயர் படிப்பு படித்தவரல்ல. எனினும் சிறந்த சிந்தனையாளராக இருந்தார். அவர் வாசித்தறிந்த புத்தகங்கள் அவரின் படைப்புகளுக்கு உறுதுணையாக இருந்தன. அவர் வாழ்ந்த எளிமையான வாழ்க்கை, கடந்து வந்த மேடு பள்ளங்கள் கசப்பு நிறைந்த சோக வாழ்க்கையுமே அவருக்கு அனுபவமூட்டியது.

"நான் வாழ்க்கையின் இருண்ட புதர்களுக்கிடையில் இருந்து வந்தவன். எனது குரல் அந்த இருண்ட புதர்களுக்கிடையில் பதுங்கிக் கிடக்கும் ஏழை எளியவர்கள் எழுப்பும் அவலக்குரலேயாகும். நான் அவர்கள் படும் துன்ப துயரங்களை உலகத்தோருக்கு எடுத்துரைக்க அவர்களால் அனுப்பப்பட்ட சாட்சியாளனாவேன்." என்று உரத்துக் கூறினார். அவர் இன்னொரு கட்டத்தில் இவ்வாறு கூறுகிறார். "ரஷ்யாவின் வரலாறு நமக்குப் பெருமை தரக்கூடியது. அதில் நமது கண்ணோட்டமும் எதிர்பார்ப்பும் பிரதிபலித்திருக்கிறது. நமது மக்களின் உயரிய செயல்பாடு அதில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது."


ஒரு படைப்பாளி தமது தேசத்துக்கு எவ்வாறு தமது எழுத்துத் துறை மூலம் தன்னை அர்ப்பணித்துள்ளார் என்பதை இக்கருத்து மூலம் நன்கு அறிந்து கொள்ளலாம். இலக்கியச் சுவையை மட்டுமே ரசிக்காமல் மனிதர்களின் எண்ணங்களை உயர்வடையச் செய்யவும், அதனூடாக முழு மனித சமுதாயத்தையுமே கொண்டு செல்வதற்கும் பாடுபட்ட மானிட வர்க்கத்தின் மாமனிதர் மார்க்சிம் கோர்க்கி.

எம்.எஸ்.கோபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகைத் தேடிய குஞ்சுக் காகம்

3 கதை, சித்திரம்: உதயா




# விவசாயியும் நீல அரக்கனும்

கதை, சித்திரம்: தீசா

9




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2004 ஜூலை மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org